பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 21 புதன்கிழமை (08-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:314

ட்ரக் - மோட்டார் சைக்கிள் விபத்தால்

## நாவாந்துறைப் பகுதியில் நேற்றிரவு பெரும் பதற்றம்!

யாழ்ப்பாணம்,ஒக்.8

நாவாந்துறை, வில்லூன்றி சந்திக்கு அருகே நேற்றிரவு கடற்படையினரின் ட்ரக்கும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்றிரவு சுமார் 7 மணியளவில் இப்பகுதி வீதி வழியேசென்ற கடற்படை ட்ரக்கும், யாழ். கொட்டடியைச் சேர்ந்த மரிக்கியாஸ் சகாயதாஸன் (வயது-40) என்பவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் மரிக்கியாஸ் சகாயதாஸன் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் ஒன்று திரண்டனர். இதேசமயம், விபத்து நடந்த இடத்தில் பொலீஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். அவர்கள் விபத்து நடந்த இடத்திற்கு பொதுமக்களைச் (16ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் தொடர்பாக மூவர் கைது!

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். நீராவியடிப்பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் மரணம் தொடர்பாக இருவர் யாழ். பொலீஸில் சரணடைந்தனர். மற்றொருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த யோகேஸ்வரன் அஜந்தீப் (வயது-21) என்பவரின் சடலம் நேற்றுமுன்தினம் வெட்டுக்காயங்களுடன் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. யாழ். நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக கல்லூரி வீதியில் இச் சடலம் கிடந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கண்ணன் (வயது 30), விவிந்தன் (வயது 2?) ஆகியோர் நேற்று அதிகாலை 3 மணியளவில் யாழ். பொலீஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்களிடம் பொலீஸார் விசாரணை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து நீராவியடி கில்னா வீதியைச் சேர்ந்த சுதாகர் என்பவரை அவரது வீட்டில் வைத்துப் பொலீஸார் (16ஆம் பக்கம் பார்க்க)

மாகாண சபை சமர்ப்பித்த அடுத்த ஆண்டுக்கான மதிப்பீட்டில்

# வடக்கு-கிழக்கு செலவு நிதி: 210 கோடி ரூபா திடீர் வெட்டு!



வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் வரைபை இறுதி செய்வதற்காக கலந்துரையாடல் நேற்று இரண்டாவது நாளாக அயர்லாந்தில் இடம்பெற்றது.

தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடக்கும் இந்தக் கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## திறைசேரியின் கைங்கரியம் இது

கொழும்பு,ஒக்ரோபர்8

**வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான (2004ஆம் ஆண்டு) செலவு நிதி மதிப்பீட்டின் 210 கோடி ரூபாவுக்குத் திடீர் வெட்டு விழுந்துள்ளது. மாகாண சபை சமர்ப்பித்த மதிப்பீட்டை ஆராய்ந்த திறைசேரியே இக்கைங்கரியத்தைச் செய்திருக்கிறது.**

மாகாண சபையின் மூலதன நன்கொடையில் 160 கோடி ரூபாவும், மீண்டுவரும் செலவீனத்தில் 50 கோடி ரூபாவும் திறைசேரியினால் வெட்டப்பட்டிருக்கின்றன.

இந்த வெட்டுக்களின் எதிரொலியாக, ஊழியர்களுக்கான சம்பளங்களைக் கணிக்கும்போது, தற்போது நடைமுறையிலுள்ள ஆளணியையே கருத்திற்கொள்ளுமாறும் திறைசேரி கேட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் 2004ஆம் ஆண்டுக்கெனத் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட மதிப்பீடுகளின்படி மூலதன நன்கொடை 740 கோடி ரூபாவாகும். மீண்டுவரும் செலவீனம் 175 கோடி ரூபா.

திறைசேரியின் வெட்டின் பின்னர் மூலதன நன்கொடை 583 கோடியே (16ஆம் பக்கம் பார்க்க)

## மாணவரைப் பலவந்தப்படுத்தி புலிகள் அமைப்பில் சேர்ப்பதில்லை

### துணைப் பொறுப்பாளர் வலியுறுத்து

கிளிநொச்சி,ஒக்.8

தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களை பலவந்தமாக விடுதலைப் போராட்டத்தில் இணைத்துள்ளதாகப் பரப்பப்படும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்துள்ளார் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் கிரிஷன்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தராஜாவைப் பதவி விலக கோருகிறது சிஹல உறுமய!

கொழும்பு,ஒக்.8

பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜாவைப் பதவி விலகுமாறு அரசிடம் சிஹல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

பொலீஸ்மா அதிபர் தமது பதவியைத் துஷ்பிரயோகம் செய்கிறார் எனவும், புலிகளுக்கு ஆதரவாக அவர் செயற்படுகிறார் எனவும் கூறியே பொலீஸ்மா அதிபரைப் பதவி விலகுமாறு சிஹல உறுமய அரசைக் கோரியுள்ளது.

பொலீஸ்மா அதிபரைப் பதவி நீக்குமாறுகோரி ஆர்ப்பாட்டங்களையும் நடத்த சிஹல உறுமய கட்சி தீர்மானித்துள்ளது. (ஒ)

உண்மைக்குப் புறம்பான வகையில் வெளியிடப்பட்ட

## பொலீஸ்மா அதிபருக்கு எதிரான செய்தி உயர்பதவிக்கு இழைத்த அகௌரவம்!

### உள்துறை அமைச்சர் சினக்கிறார்

கொழும்பு,ஒக்.8

பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கும் சமயத்தில் அவருக்கெதிராக உண்மைக்குப் புறம்பான அவதூறுச் செய்திகளை வெளியிடுவது நாட்டின் உயர் பதவி வகிக்கும் ஒருவருக்குச் செய்யும் கௌரவமாகாது.

- இப்படிக் கூறினார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா, போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் மகளின் பிறந்ததின வைபவத்தில் கலந்துகொண்டார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. அச்செய்தியை கேள்வியுற்ற பொலீஸ் மா அதிபர் தனது வெளிநாட்டு விஜயத்தை ரத்துச் செய்துவிட்டு நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

பொலீஸ்மா அதிபருக்கு எதிரான செய்தி பற்றி விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று உள்துறை அமைச்சில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் ஜோன் அமரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:-

பொலீஸ்மா அதிபர் இரண்டு வருடங்களுக்கு முன்பு பிறந்தநாள் வைபவமொன்றில் அவரது பிறந்த ஊரைச் சேர்ந்த நண்பரின் அழைப்பை ஏற்று கலந்துகொண்டார். ஆனால், அந்த நபர் தற்போது போதைப்பொருள் கடத்தல் விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று தெரியவந்துள்ளது. எனவே, வைபவமொன்றில் கலந்துகொண்டமைக்காக பொலீஸ்மா அதிபர் மீது குற்றம் சுமத்த முற்படுவது அர்த்தமற்றசெயலாகும். இந்த விவகாரம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் துறையினர் விசாரணை மேற்கொண்டு (16ஆம் பக்கம் பார்க்க)



# நக்சலைட்டுகளுக்கு புலிகளுடன் தொடர்பு என்கிறார் அத்வானி!



இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் செயற்படும் மக்கள் போர்ப்படை நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் இலங்கையின் விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடர்பு இருந்திருக்கிறது என்று இந்திய துணைப் பிரதமர் அத்வானி கூறினார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்த அத்வானி, விடுதலைப் புலிகளுடனான தொடர்பைப் பயன்படுத்தி நக்சலைட்டுகள் நவீன வெடிகுண்டுகளைக் கையாள்வது குறித்து கற்றுக்கொண்டுள்ளனர். இருப்பினும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை எனவும் கூறினார்.

நக்சலைட்டுகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் சந்திரபாபு நாயுடு காயங்களுடன் உயிர்தப்பினார் என்பது தெரிந்ததே. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக ஆந்திரப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இச்செய்தி தொடர்பாகவே துணைப்பிரதமர் அத்வானி நிருபர்களுடன் பேசினார்.

# இருப்பிடம் அற்ற குடும்பங்களுக்கு இலவசமாக வீடு வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

நாவற்குழி வீடமைப்புத் திட்டம் உட்பட ஏனைய வீடமைப்புத்திட்டங்களில் உள்ள 2 ஆயிரத்து 468 வீடுகளைப் புனரமைத்து வீடற்றவர்களுக்கு இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்தை மற்றும் வீடமைப்பு அதிகார சபைத் தலைவர், உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்குவது தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

கீழ்க்கண்ட முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டன.

✪ நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில், பொதுமக்களுக்கு விற்கப்பட்டு பணம் செலுத்திய 130 வீடுகள தவிர்ந்த எஞ்சியுள்ள 168 வீடுகளைப் புனரமைத்து வீடற்றவர்களுக்கு இலவசமாக வழங்கல்.

✪ குடாநாட்டில் ஏற்கனவே அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் மூலம் வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 300 வீடுகளையும் புனரமைத்து வீடற்ற குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கல்.

✪ குருநகர் ஐந்து மாடித்திட்டத்தில் காலியாக உள்ள வீடுகளைத் திருத்தி உரிமையாளர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தல். உரிமையாளர் இல்லாத பட்சத்தில், வேறு ஆள்களுக்கு அந்த வீடுகளை வழங்கல்.

✪ இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதியை அரச சார்பற்ற அமைப்புக்களிடம் இருந்து திரட்டல்.

மேற்கண்ட முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இப்பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு, யாழ்.அரச அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## சமசமாஜ எம்.பி. சபையில் விசேட அறிக்கை

# ஈராக் போரை ஆதரித்த உரைக்கு பிரதமர் மன்னிப்பு கோரவேண்டும்

கொழும்பு,ஒக்.8

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை ஆதரித்து ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியதற்காக பிரதமர் ரணில் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதே லங்கா சமசமாஜக் கட்சியின் நிலைப்பாடாகும்.

பொ.ஐ.முன்னணி எம்.பியும். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவருமான பத்தேகம சமித்த தேரர் நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை ஆதரித்துப் பேசியதை லங்கா சமசமாஜக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது அமெரிக்கா சர்வதேச பொலீஸ்காரனாகச் செயல்படுவதை மூன்றாம் உலக நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச் சபையிலுள்ள நாடுகளும் எதிர்க்கும் போது இலங்கைப் பிரதமர் ஆற்றிய உரை இலங்கையைத் தனிமைப்படுத்திவிட்டது.

ஈராக்கில் எதுவித இரசாயன ஆயுதங்களும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நிலையில் ஈராக் மீது அமெரிக்கத் தாக்குதல் நடத்தியதை நியாயப்படுத்த முடியாது. இத்தாக்குதலை பல உலக நாடுகள் கண்டித்துள்ளன. ஏன், அமெரிக்காவின் பெரும்பாலான மக்களும் இத்தாக்குதலை ஏற்றுக்கொள்ளவில்லை.

பிரதமரின் உரையின் மூலம் ஐரோப்பியநாடுகள், மூன்றாம் உலக நாடுகள், முஸ்லிம் நாடுகள் அனைத்தும் எம்மீது சீற்றம் கொண்டுள்ளன.

- இவ்வாறு அவர் கூறினார்.

## வீடுமுறைகளில் கடைகள் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.8

தீபாவளியையொட்டி வர்த்தக விடுமுறை தினங்களான எதிர்வரும் 11ஆம், 12ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் வர்த்தக நிறுவனங்களை வழமைபோல் திறந்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வர்த்தகர்களுக்கு யாழ். வணிகர் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேசமயம், மேற்குறிப்பிட்ட தினங்களில் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நலன்கள் பேணப்பட வேண்டும் என்றும் சங்கம் கோரியுள்ளது. (ஒ-3-10)

# லெப்.கேணல் நிரோஜனின் நினைவுமண்டபம் திறப்பு

கிளிநொச்சி,ஒக்.8

1999 ஆம் ஆண்டில் மன்னார் கடலில் இடம்பெற்ற மோதலில் வீரகாவியமான லெப்.கேணல் நிரோஜனின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் நேற்று முல்லைத்தீவில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றினார். தேசியக் கொடியினை சிறப்புப் பயிற்சி ஆசிரியர் கேணல் கடாபியும் கடற்புலிகளின் கொடியினை கடற்புலிகளின் மகளிர் பொறுப்பாளர் வித்தியாவும் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு மன்னார் கடற்பரப்பில், கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரகாவியமான 15 மாவீரர்களது திருவுருவப்படங்களுக்கு ஈகச் சுடரினை பெற்றோர்களும் உறவினர்களும் ஏற்றி வைத்து மலரஞ்சலி செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து லெப். கேணல் நிரோஜன் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தின் பெயர்ப் பலகையினை கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன் திரைநீக்கம் செய்து வைத்தார். நினைவு மண்டபத்தினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல சூசை நாடா வெட்டி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

# வெளிநாட்டு விஜயத்தை இடைநடுவில் ரத்துச் செய்து திரும்பினார் ஐ.ஜி.பி.!

## அவர் குறித்து வெளியான செய்திகளின் எதிரொலி

கொழும்பு,ஒக்.8

பொலீஸ்மா அதிபர் ரீ.இ.ஆனந்தராஜாவுக்கு எதிராக ஊடகங்களில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து அவர் தனது வெளிநாட்டு விஜயத்தை இடைநடுவில் ரத்துச் செய்து அவசரமாக நாடு திரும்பினார்.

போதைப் பொருள் விற்பனையாளர் எனத் தற்போது கருதப்படும் ஒருவரின் மகளின் பிறந்ததின வைபவம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றபோது அதில் பொலீஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி.) கலந்துகொண்டார் எனவும் அவர் கலந்துகொண்டதை உறுதிப்படுத்தும் வீடியோ பதிவு நாடா பொலீஸாருக்குக் கிடைத்துள்ளது எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இச்செய்திகள் வெளியான போது பொலீஸ்மா அதிபர் வெளிநாடொன்றுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.



போதைப்பொருள் விற்பனையாளர் எனக் கூறப்படும் நபரொருவரிடமிருந்து அண்மையில் 60 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. அந்த நபரின் வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு வீடியோவில், பொலீஸ் மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா, பிரதிப் பொலீஸ் மா அதிபர் நிமால் ஜயசுந்தர, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அங்குனாவல போன்றோர் பிறந்த தின வைபவத்தில் கலந்துகொண்ட காட்சிகள் பதிவாகியிருக்கின்றன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜா, பிறந்ததின வைபவத்தில் கலந்துகொண்டது உண்மையென்றும் ஆனால், அந்தநபர் போதைப் பொருள் விற்பனையாளர் என்பது தனக்குத் தெரியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து ஊடகவியலாளருக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்றை நேற்று மாலை உள்துறை அமைச்சில் பொலீஸ் மா அதிபர் கூட்டியிருந்தார்.

## குண்டுவீச்சில் வீடுகள் சேதம்!

கொழும்பு,ஒக்.8

கண்டி, மகியாவ பகுதியில் குண்டு வீச்சு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இரண்டு வீடுகள் சேதத்துக்குள்ளாகின என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு கண்டி, மகியாவ முஸ்லிம், பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள இரண்டு வீடுகளைக் குறிவைத்து குண்டுவீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கருத்துரை

குருநகர்,ஒக்.8

யாழ். அகவொளி குடும்ப வளத் துணை நிலையத்தில் நாளை நடைபெறவுள்ள முழுநிலாநாள் கருத்தரங்கில் "குடும்பங்கள் எங்கே செல்கின்றன" என்னும் தலைப்பில் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவார்.

இந்நிகழ்வு நாளை பி.ப. 3.30 மணிக்கு அகவொளி நிலையத் தலைவர் வணபிதா எஸ்.ஜே.இராசநாயகம் தலைமையில் நடைபெறும். (ஒ-51)

# பிரஜாவுரிமை வழங்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது

கொழும்பு,ஒக்.8

இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்ட மூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தின் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு 172 வாக்குகளால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டமூலத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சபையில் கூடியிருந்த ஆளும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதுடன் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர்.

இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதனால், இலங்கையில் வாழும் ஒரு லட்சத்து 68 ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை உள்துறை அமைச்சர், ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது, இந்தச் சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு பிரேரணை ஒன்றை சமர்ப்பித்த அமைச்சர், 1964 ஆம் ஆண்டுடன் பிரஜாவுரிமை அற்றுப போன நிலையில் இலங்கையில் வாழும் அனைருக்கும் இதன் மூலம் பிரஜாவுரிமை அந்தஸ்து கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

40 வருடங்களுக்கு மேலாக நாட்டின் அபிவிருத்திக்காகவும் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்புடன் வியர்வை சிந்தி உழைத்த இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கு நேற்று நாடாளுமன்றில் கலந்துகொண்ட ஆளும், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (ஒ-5)

## திராவகம் பட்டத்தில் மாணவன் காயம்!!

தென்மராட்சி,ஒக்.8

பாடசாலைச் சுற்றாடலைத் துப்பரவு செய்த சமயம், அங்கு கிடந்த போத்தலை எடுத்து தூர வீசிய மாணவன் அதனுள் இருந்து திராவகம் பட்டு முதுகில் காயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் சோக்குவில் கிழக்கைச் சேர்ந்த பாலசிங்கம் நிரோஜன் (வயது 19) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். (ஒ-117)

# ஆனையிறவில் நடந்த விபத்தில் மீசாலை வாசி உயிரிழப்பு!

தென்மராட்சி,ஒக்.8

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுப் பகல் மோட்டார் சைக்கிளும் - மீன் ஏற்றும் குளிரூட்டிய வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் மீசாலை வாசி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்தவரான மீசாலை மேற்கைச் சேர்ந்த மாசிலாமணி ஸ்ரீகாந்தன் (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவார்.

புதுக்குடியிருப்பில் உள்ள தமது மாமியாரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு மீசாலைக்குத் திரும்புகையில் இந்த விபத்தில் இவர் சிக்கியுள்ளார்.

உயிரிழந்தவர் தனியார் வாகனமொன்றில் ஏற்றிவரப்பட்டு முகமாலையிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகன வழித்துணையுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட சமயம் இடைவெளியில் அவர் மரணமானார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-3-15-117-139)

# புத்தளத்தில் மினி சூறாவளி; கடை, வீட்டு கூரைகள் நாசம்!

புத்தளம்,ஒக்.8

புத்தளம் நகரில் நேற்றுமுன்தினம் இரவு மினி சூறாவளி வீசியது. இதனால், புத்தளம் - மன்னார் வீதியில் மாரியம்மன் கோயில் முன்பாகவுள்ள சிறிய வர்த்தக நிலையமொன்றும், வீடொன்றும் சேதமடைந்தன.

எம்.எஸ்.எம்ரசீத் என்பவரின் வர்த்தக நிலையத்தின் கூரை அள்ளுண்டு சென்றது. சூறாவளியுடன் பெய்த மழையினால் அங்கிருந்த பொருள்களுக்கும் பாரிய சேதமேற்பட்டுள்ளது.

அந்த வர்த்தக நிலையத்தின் பக்கத்திலுள்ள எம்.ஆர்.அபர்கீனின் வீட்டின் கூரையும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த பொருள்களுக்கு சேதம் மேற்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

# ஊமலின் கீழ் மணலை மறைத்து கடத்திய நபருக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி,ஒக்.8

லான்ட்மாஸ்டர் பெட்டிக்குள் மணலை ஏற்றி அதன் மேல் ஊமல் கொட்டைகளை பரவி மணலை மறைத்து எடுத்துச் சென்றபோது மீசாலையில் பொலீஸாரிடம் சிக்கிய நபருக்கு, அபராதம் விதிக்கப்பட்டது.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த சந்திரராசா விமலன் என்ற மேற்படி நபர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த நபருக்கு 4ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் பறிமுதல் செய்யப்பட்ட மணலை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் புனரமைப்புப் பணிக்கு வழங்குமாறு நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். (ஒ-117)

## அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.8

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயல நிலை ஆய்வு தொடர்பான இரு நாள் செயலமர்வு நாளை வியாழக்கிழமையும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-5)

# சிரியா மீதான தாக்குதலை ஆதரித்து இஸ்ரேலுக்கு அமெரிக்கா வக்காளத்து

வாஷிங்ரன்,ஒக்.08

சிரியாமீது இஸ்ரேல் நடத்திய ஆகாயத் தாக்குதல் நியாயமானதே என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் வக்காளத்து வாங்கியிருக்கிறார்.

பலஸ்தீனத் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் சிரியாவில் உள்ளன எனக் கூறி அந்நாட்டின் மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதனால், இஸ்ரேல் மீது அரபுநாடுகள் கோபமுற்றுள்ளன. இஸ்ரேலின் இந்தத் தாக்குதலைக் கண்டிக்குமாறு சிரியா கொண்டுவந்த பிரரேரணையும் ஐ.நாவில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி புஷ் மேற்படி தாக்குதலை நியாயப்படுத்தி இஸ்ரேலுக்கு வக்காளத்து வாங்கியிருக்கிறார். அத்துடன் இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அவர் கண்டித்திருக்கிறார்.

இஸ்ரேல் தனது நாட்டை பாதுகாப்பதற்கு தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. ஆனால், பதற்ற நிலை ஏற்பட்டுவிடாமல் பார்க்கவேண்டியது இஸ்ரேலின் கடமை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

**லெபனான் மீதும் தாக்குதல்**

இதேவேளை -

லெபனான் மீதும் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருக்கிறது. இதில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான்.

இந்தத் தாக்குதலை மூடி மறைக்க இஸ்ரேல் முயற்சிக்கிறது. அதற்காக லெபனானில் வீழ்ந்து வெடித்த ஏவுகணை குறிதவறி வீழ்ந்துவிட்டது என்று அது கூறியுள்ளது.

லெபனானில் ஏவுகணை வீழ்ந்து வெடித்த சிறிது நேரத்தில் இஸ்ரேல் - லெபனான் எல்லையில் கடமை காத்த இஸ்ரேலிய படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

லெபனான் தீவிரவாதிகளே படை வீரரை சுட்டுக்கொன்றனர் என்று இஸ்ரேல் கூறியுள்ளது. ஆனால், இதனை லெபனான் மறுத்திருக்கிறது.

சிரியா, அதனைத் தொடர்ந்து லெபனான் என்று இஸ்ரேலின் தாக்குதல்கள் மேலும் தொடரக்கூடாது என்று ஐ.நா. செயலர் கோபி அனான் கூறியுள்ளார்.

# துப்பாக்கியை பறித்த கைதி மூவரை சுட்டுக் கொன்றார்!

## மணிலா பொலீஸ் தலைமையகத்தில் சம்பவம்

மணிலா,ஒக்.8

பிலிப்பைன்ஸ் சிறையில் பொலீஸாரின் துப்பாக்கியை பறித்த கைதி ஒருவர் சரமாரியாகச் சுட்டதில் மூன்று பொலீஸார் கொல்லப்பட்டனர்; மேலும் மூவர் காயமடைந்தனர்.

இங்கு நின்ற ஏனைய பொலீஸார் துப்பாக்கி தாரியையும் சுட்டுக் கொன்றனர்.

தலைநகர் மணிலாவில் உள்ள பொலீஸ் தலைமையகத்தில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. சுட்டுக் கொல்லப்பட்ட மேற்படி கைதி, முஸ்லிம் போராளியாவார்.

துப்பாக்கியை பறித்தவுடன் சிறைக் கூடங்களிடையே மறைந்திருந்தவாறு இவர் சரமாரியாகச் சூடு நடத்தினார்.

முதலில் சிறைக்கூடம் ஒன்றிலிருந்து இவர் தாக்குதல் நடத்திய போதும், பின்னர் கழிப்பறைக்குள் புகுந்து, அங்கிருந்தவாறு துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

# அரச பணத்தை குடும்பச் செலவுக்கு பயன்படுத்தினார் உகண்டா ஜனாதிபதி!

## எதிர்க்கட்சிகள் கிளப்பிய சர்ச்சை

லண்டன்,ஒக்.8

உகண்டா ஜனாதிபதி யோவேரி முசேவெனி தனது மகளை மகப்பேற்று வைத்தியசாலைக்கு அரசுக்குச் சொந்தமான ஜெட் விமானத்தில் அனுப்பியுள்ளார். இது அங்கு சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஜெட் விமானத்தில் தனது மகளையும் மனைவியையும் மகப்பேற்றிற்காக வைத்தியசாலைக்கு அனுப்பியதை ஜனாதிபதி முசேவெனி ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனை எதிர்க்கட்சிகளும், ஊடகத்துறையும் கடுமையாக விமர்சித்துள்ளன. அரச பணத்தை விரயம் செய்யும் நடவடிக்கை இது என்று அவை கூறியுள்ளன. ஆனால், மகப்பேற்றிற்காக ஐரோப்பாவிற்கு தனது குடும்பத்தினரை தனக்கு வழங்கப்பட்டிருந்த ஜெட் விமானத்தில் அனுப்பியது தவறில்லை என்று ஜனாதிபதி முசேவெனி கூறியுள்ளார்.

அரச பணம் வீணாக விரயமாகுவதை தான் ஏற்றுக்கொள்வதில்லை என்றும் ஆயினும் தனது குடும்பத்தினின் சுகவீனம் தொடர்பான விடயங்களைத் தவிர்க்கமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் எதிரிகளே தன்மீது அபாண்டமான பழியைச் சுமத்தி தன்னைப் பதவி கவிழ்க்க முயற்சிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது மகளை மகப்பேற்றிற்காக ஐரோப்பா அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டது ஏன் என்பது குறித்தும் அங்கு சர்ச்சை எழுந்துள்ளது.

அதற்கு ஜனாதிபதி முசேவெனி தன்மீது பகைமைகொண்ட உகண்டா டாக்டர்கள் தனது குடும்பத்தினரை சிகிச்சைக்கு உட்படுத்துவதைத் தான் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆயினும், ஐரேப்பாவிற்கு செல்வதற்கு செலவளித்த 27,000 டொலர்களை வைத்தியசாலை நுளம்பு வலைகளை வாங்க பயன்படுத்தியிருக்கலாம் என்று பத்திரிகைகள் விமர்சித்துள்ளன.

# ஆண் கருத்தடை மாத்திரை ஐந்து ஆண்டுகளில் தயார்

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஆண்களுக்கான கருத்தடை மாத்திரையை அறிமுகம் செய்யும் முயற்சியில் நெதர்லாந்து விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். தாய்லாந்தில் கருத்தடை தொடர்பாக நடந்த கருத்தரங்கு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த மாத்திரையை உட்கொள்ளும் ஆண்களின் விந்தில் உள்ள உயிரணுக்களின் பெருக்கம் குறையும். அவர்கள் உடலுறவு கொள்ளும் பெண்கள் கருத்தரிக்க மாட்டார்கள். பிரிட்டன், ஜேர்மனி, பின்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள ஆராய்ச்சி மையங்களில் இந்த மாத்திரை குறித்து ஆராய்ச்சி நடைபெறுகிறது.

உடலுறவின் போது ஒவ்வொரு முறையும் வெளிப்படும் ஆண்களின் விந்தணுவில் சாதரணமாக 12 கோடி உயிரணுக்கள் இருக்கும். ஒரு மில்லி லீற்றர் விந்தணுவில் இரண்டு கோடி உயிரணுக்கள் இருக்கும். ஒரு மில்லி லீற்றர் விந்தணுவில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கையை 10 லட்சமாக குறைப்பதே ஆண் கருத்தடை மாத்திரையின் நோக்கமாகும்.

# தீவிரவாத சக்திகளின் மையமாகும் ஈராக்; அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை!



நியூயோர்க்,ஒக்.8

தீவிரவாத சக்திகள் அனைத்தும் ஒன்று கூடும் புதிய மையமாக ஈராக் மாறும் அபாயம் உள்ளது என்று அமெரிக்காவை ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி புட்டின் அளித்த பேட்டியை 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை நேற்று வெளியிட்டது. அதில் ஜனாதிபதி புட்டின் தெரிவித்துள்ளதாவது:-


ஈராக் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது தீவிரவாதிகளின் புகலிடமாக மாறிவருகிறது. அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை நடத்திய படையெடுப்பில் சதாம் அரசு வீழ்ந்தபிறகு உலகமெங்கும் முஸ்லிம் நாடுகளில் இருந்து தீவிரவாதிகள் பெரும் எண்ணிக்கையில் ஈராக்கில் தஞ்சம் புகுந்துவருகிறார்கள். அனைத்து அழிவு சக்திகளும் ஒன்று கூடும் புதிய மையமாக ஈராக் மாறிவிடும் அபாயம் உள்ளது.

ஈராக்கில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கக் கூட்டுப்படையினருக்கு, ஈராக்கில் உள்ள சதாம் விசுவாசிகளும், சதாம் ஆட்சியின் போது அவர் யாரை எதிர்த்து வந்தாரோ அந்த அடிப்படைவாதிகளும் தற்போது எதிரிகளாக உள்ளனர். இவ்விரு எதிரிகளையும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் சமாளிக்க வேண்டியுள்ளது.

எனவே, ஈராக்கியர்களுக்கு இறையாண்மையை மீட்டுத்தரும் நடவடிக்கையில் அமெரிக்கா உடனடியாக ஈடுபட வேண்டும். அதேபோல், அங்கு சர்வதேச படைகள் எத்தனை காலம் தங்கியிருக்கும் என்று திட்டவட்டமாக காலவரம்பை வரையறுக்கும் பிரேரணையை ஐ.நாவில் விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

இதனை ஜனாதிபதி புஷ் அரசு உடனடியாகச் செய்யவில்லை என்றால், ஈராக்கில் தீராத வன்முறையை எதிர்கொள்ள வேண்டிவரும். முன்பு சோவியத் யூனியன், ஆப்கானிஸ்தானில் அர்ப்பமான போரில் ஈடுபட்டு இடர்பாட்டில் சிக்கிக்கொண்ட அவல நிலைமை, அமெரிக்காவுக்கும் ஈராக்கில் ஏற்படலாம்.

எனவே, ஜனாதிபதி புஷ் அரசு சுதாகரித்துக்கொண்டு உடனடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் - என்று அவர் கூறியிருக்கிறார்.



ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின்னர் அங்கு வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்துள்ளது. முன்னாள் படைவீரர்களும், பொலீஸாரும் தமக்குச் சம்பளம் வழங்கக்கோரி அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் கிளர்ச்சிகளையும் நடத்திவருகிறார்கள். அவ்வாறு நடத்தப்பட்ட கிளர்ச்சியின் போது முன்னாள் பொலீஸ் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் அமெரிக்கப் படையினரை நோக்கி உடைந்த கொங்கிறீட் துண்டொன்றை வீசுவதைக் காணலாம். இதேவேளை, ஈராக்கில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

# 25 சிவிலியன்களின் சடலங்கள் ஐ.நா.அமைதிப்படையினரால் மீட்பு!

## கொங்கோவில் மீண்டும் பதற்றம்

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் வடகிழக்கு பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 23 சிவிலியன்களின் சடலங்களை அங்குள்ள ஐ.நா. அமைதிப்படையினர் கண்டெடுத்துள்ளனர்.

மேலும் 32 சடலங்களை தாம் கண்டெடுத்து புதைத்ததாக கச்சல் கிராம மக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஐ.நா.படையினர் மீட்டெடுத்த சடலங்கள் அனைத்திலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் உள்ளன.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் இவர்கள் சுடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அங்குள்ள தீவிரவாதக் குழுக்களே இவர்களை சுட்டுக் கொன்றுள்ளன என்று ஐ.நா. அமைதிப்படை தெரிவித்துள்ளது. கடந்த நான்கு வருடங்களாக தீவிரவாதிகளின் தாக்குதலில் 50,000 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் ஐ.நா. அமைதிப்படை அங்கு சென்ற பின்பு படுகொலைகள் நடக்காமல் இருந்தன. ஆனால், தற்போது மீண்டும் அங்கு படுகொலைகள் ஆரம்பித்திருக்கின்றன.

படுகொலை செய்யப்பட்டவர்களில் கருவுற்ற தாய்மார்,பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் அடங்குவர். இந்தப் படுகொலைகளை அடுத்து அங்கு மீண்டும் பதற்றம் நிலவுகிறது.

கொங்கோ தேசப்பற்றாளர் அமைப்பான யு.பி.சி. இப்படுகொலைகளுக்கு லெண்ட் தீவிரவாதிகளே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

ருவாண்டாவின் ஆதரவுடன் செயற்படும் மேற்படி தேசப்பற்றாளர் அமைப்பின் தலைவர் கூறுகையில்,

லெண்ட் தீவிரவாதிகளின் மேற்படி படுகொலைகளுக்கு சர்வதேச சமூகம் தகுந்த பதிலடி கொடுக்கவேண்டும் - என்றார்.

## 80 வயது முதியவர் 44 ஆவது திருமணம்!

பங்களாதேஷில் வசிக்கும் 80 வயது முதியவர் ஒருவர் 44ஆவது முறையாக திருமணம் செய்திருக்கிறார்.

அசர்கான் என்ற இந்த முதியவர் திருமணம் செய்தபெண்களில் பலர் முதலிரவன்றே இதுவரை விட்டு விட்டு ஓடி விட்டனராம். ஒரேஒரு பெண் மட்டும் இவரோடு 7 வருடங்கள் சேர்ந்து குடும்பம் நடத்தியுள்ளார். அதன்பின் அந்தப் பெண்ணும் இவரை விட்டு விட்டார். மற்றும் சிலர் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் மட்டுமே இவருடன் வாழ்ந்திருக்கின்றனர்.

தனது 43 மனைவிகளும் தன்னை விட்டு என்ன காரணத்திற்காக ஓடினர் என்பது தனக்குப் புரியவில்லை என்று கூறும் இவருக்கு, எத்தனை குழந்தைகள் தனக்குப் பிறந்தன என்பதும் நினைவில்லையாம்.

தற்போது 44ஆவது மனைவியை (வயது-55) இவர் கரம்பிடித்திருக்கிறார்.

# ஓரினச் சேர்க்கையாளர் தினம் பரீஸில் கொண்டாடப்பட்டது

## ஆயிரக்கணக்கான ஜோடிகள் பங்கேற்றனர்

பரீஸ்,ஒக்.8

ஓரினச் சேர்க்கையாளர் தினம் முதன் முறையாக பரீஸில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அங்குள்ள பூங்கா ஒன்றில் கூடிய ஆயிரக்கணக்கான ஓரினச் சேர்க்கையாளர்கள் ஆடியும் பாடியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

1991ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையாளர் தினம் முதன் முறையாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு உலக நாடுகளிடம் இருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. ஆனாலும், அங்கு ஆண்டுதோறும் இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.

ஓரினச் சேர்க்கையாளர் குறித்த சர்ச்சை படுவேகமாக பரவிவரும் நிலையில் பாரிஸிலும் முதன்முறையாக ஓரினச் சேர்க்கையாளர் தினம் கொண்டாடப்பட்டது.

இதில் ஓரினச் சேர்க்கை பிரியர்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர். இங்கு ஆண்களும், பெண்களும் அவரவர் ஜோடியுடன் கேளிக்கை கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரான்ஸ் பத்திரிகை ஒன்றே இந்தத் தினத்தை பரீஸில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

# விஞ்ஞானம்/சுற்றுச் சூழல்



“நானும் அவரும் ஒரே வேலை தான் செய்கிறோம் ஆனால அவருக்கு என்னைவிட அதிக சம்பளம் கிடைக்கின்றது” என்று மனிதர்கள் அடிக்கடி தமக்குள் சண்டையிடுவதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால் குரங்குகள் அவ்வாறு செய்வதில்லை. இவ்விடயத்தில் குரங்குகள் மனிதனைவிட பண்புள்ளவையாகவும் ஒற்றுமையாகவும் இருப்பதை இப்போது கண்டுபிடித்திருக்கின்றார்கள். இருந்தாலும் அவற்றுக்கு நீதி, நியாயம் எல்லாம் பார்க்கத் தெரிந்திருக்கிறது. எல்லோருடனும் நட்பாகப் பழகக்கூடிய கபில நிற “கபுசின்” (Capuchin) இனக் குரங்குகளைக் கொண்டு செய்த ஆராய்ச்சிகள் பல சுவையான தகவல்களைத் தந்திருக்கின்றன.

ஆராய்ச்சியாளர்கள், இக் குரங்குகளுக்கு அனுமதி இலக்கம் (Token) ஒன்றைக் கொடுத்துத் தமது பற்றி ஆராய்வதில் நான் நாட்டம் கொண்டுள்ளேன்” என்று சாராபுறோஸ்னன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொருவரும் நேர்மையாக இருந்தால், எல்லா மனிதர்களுமே ஒற்றுமையாகக் கூடி வாழ முடியும் என்ற சுவையான உண்மையை தற்போது அறிந்திருக்கிறார்கள்.

மனிதனின் நேர்மை, உணர்வு, பரிணாமவளர்ச்சியால் ஏற்பட்டதா? அல்லது அவனது சமூக அமைப்பால் உண்டானதா? என்பதை அறிவதில், சாரா புறோஸ்னன் கவனம் செலுத்திவருகிறார். இதற்காக அவரும் அவரது சகாக்களும் “கபுசின்” இனக் குரங்குகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்யத் திட்டமிட்டார்கள்.

இவ்வகைக் குரங்குகள் சகிப்புத் தன்மையும் கூடி வாழும் திறனையும் கொண்டவையாக இருப்பதாலேயே இவற்றைத் தேர்வு செய்ததாக புறோஸ்னன் குறிப்பிட்டார். ஓ குகளுக்குச் சம்பளமாக, இல்லை! இல்லை! உணவாக ஒரு பக்கச் சார்பாக வேறு வேறு வகையான உணவுகள் வழங்கப்பட்டன. முன்னர் ஒரு போதும் இது போன்ற வஞ்சகச் குள் சண்டையிடுவதைப் பார்த்து இரசிப்பதில், மகிழ்ச்சியடையும் தனது கீழ்த்தரமான பிறவிக்குணத்தை மனிதன் இங்கே குரங்குகளிலும் பரீட்சித்துப் பார்க்க விரும்பித்தான். அதன்



## குரங்குகளுக்கும் நீதி நியாயம் பார்க்கத் தெரியும் சொன்னால் நம்புவீர்களா?

உணவைப் பெறும் முறையைப் பழக்கினார்கள். பொதுவாக, இந்த அனுமதிஇலக்கத்தைக் கொடுத்துத் தமக்குரிய வெள்ளரிக்காய்களை வாங்கி உண்பதில் இக்குரங்குகள் மகிழ்ச்சியடைந்தன. ஆனால், குரங்குகள் மிகவும் விரும்பியுண்ணும் திராட்சைப்பழங்களை, ஒரு குரங்குக்குக் கொடுக்காமல் இன்னொரு குரங்குக்குக் கொடுத்த போது, குரங்குகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. சில குரங்குகள் தமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்ய மறுத்தன. இன்னும் சிலவோ “எனக்குத் திராட்சைப்பழம் தந்தால் தான் சாப்பிடுவேன் இல்லாட்டி எனக்குச் சாப்பாடும் வேணாம் ஒண்டும் வேணாம்” என்று மனிதர்கள் சொல்வது போல், கொடுக்கப்பட்ட உணவை வாங்கி, வைத்துக்கொண்டு, அதை உண்ண மறுத்தன.



இதனால், நீதி, நியாயங்களை அறியும் உணர்வு மனிதனுக்குக் குரங்கிலிருந்துதான் வந்தது. அது மனிதனது சமூக அமைப்பால் வரவில்லை என ஆராய்ச்சியாளர்கள் இப்போது கூறுகிறார்கள். அட, நீதி நியாயங்களைக் கூடக் குரங்குகள் தான் மனிதனுக்கும் சொல்லித் தர வேண்டியுள்ளது.

சாரா புறோஸ்னன், பிரான்ஸ்டிவால என்ற இரு ஆராய்ச்சியாளர்களால், அமெரிக்காவிலுள்ள எமோறிப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் ‘ஜேர்னல் நேச்சர்’ என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ளன. “ கூடி வாழ்தல் தொடர்பான பரிணாமவளர்ச்சி மனிதர்களே! இவ்விரு குணங்களும் உங்களுக்கு இருக்கின்றதா? ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். குரங்கிடம் இருந்தாவது இவற்றைக் கற்றுக்கொள்ள முயற்சிசெய்யுங்கள்.

குரங்குகளுக்கு வித்தியாசமான பல வெகுமதிகளைக் கொடுத்து, அவற்றின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறிய, எளிய பரிசோதனை ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்தார்கள். கபுசின் வகைக் குரங்குகள் இயற்கையாகவே வெள்ளரிக்காய்களை விரும்பியுண்ணும். ஆனால் திராட்சைப்பழங்கள் என்றால், வெள்ளரிக்காய்களுக்கு இரண்டாம் இடம் தான். ஒரே வேலையைச் செய்து முடித்த இரு கபுசின் குரங் செயலை யாரும் இவற்றிற்குச் செய்தது கிடையாது. முதலில், அருகருகே விடப்பட்ட இரு கபுசின் குரங்குகளுக்கு, அவை தமக்கு இடப்பட்ட வேலையைச் செய்து முடித்தவுடன், வெகுமதியாக வெள்ளரிக்காய்கள் வழங்கப்பட்டன.

மனிதர்களுக்கிடையே விரோதங்களை ஏற்படுத்தி, அவர்கள் தமக்

முதற்கட்டமாக, இரு குரங்குகளில் ஒன்றிற்குத் திராட்சைப்பழங்களும் மேலதிகமாக வழங்கப்பட்டது. சில வேளைகளில் எந்த வேலைகளையும் செய்யாத போதும் அதற்குத் திராட்சைகள் கொடுக்கப்பட்டது. ஆனால், மற்றைய குரங்கிற்கு எப்போதும் போல் வெள்ளிக் காய்களே, அதுவும் அதன் வேலைகளை முடித்த பின்பே வழங்கப்பட்டது.

இப்போது குரங்குகளின் நடவடிக்கைகளில் ஏதாவது மாற்றங்கள் உள்ளனவா? என ஆராய்ச்சியாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். ஆம்! அவர்களது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. குரங்குகளின் செயற்பாடுகளில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் கண்டறியப்பட்டன. சில நேரங்களில் அவை தமக்கிடப்பட்ட வேலைகளைச் செய்ய மறுத்தன. மற்ற நேரங்களில் அவை தமது கடமைகளைச் செய்தன. ஆனால் அதற்கான வெகுமதிகளை வாங்க மறுத்தன. இன்னும் சில நேரங்களில்அவை இரண்டும் தமக்குரிய வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டபின், அவற்றைக் கீழே எறிந்து விட்டன.

தனது சக குரங்கிற்கும் தனக்குக் கிடைப்பது போல் திராட்சைகள் கிடைக்கவில்லையே என்ற ஒரே காரணத்திற்காகத் தான் வழமையாக விரும்பியுண்ணும் பழங்கள் கொடுக்கப்பட்ட போதும் கூட அவற்றை உண்ண ஒரு குரங்கு மறுத்தது. அவ்வாறே மற்றைய குரங்கும் அதற்கு விரும்பிய உணவுகள் கொடுக்கப்பட்ட போதும் அதை ஏற்க மறுத்தது. ஆனால், அவை எக்காரணம் கொண்டும் தமக்குள் சண்டை செய்யவில்லை குரங்குகளின் இந்த நேர்மையையும் ஒற்றுமையையும் கண்டு ஆராய்ச்சியாளர்கள் அதிசயித்துப் போனார்கள்.

பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாலேயே நீதி நியாயங்களை அறியும் நேர்மையுணர்வு மனிதனுக்கு வந்தது - (இவை மனிதனுக்கு இருக்கின்றதா?)- என்ற கருத்து மிகவும் சுவையான ஒன்றாகும்.என இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

“எனினும் இயற்கை தொடர்பான கல்வியில் இன்னும் பல ஆராய்ச்சிகள் செய்ய வேண்டியுள்ளது. ஏனைய விலங்குளிலும் இந்த விடயத்தின் அடிப்படையில் மேலும் பல ஆராய்ச்சிகள் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.இதே ஆராய்ச்சிகளை வாலில்லாக் குரங்குகள் வகையைச் சேர்ந்த சிம்பான்சிகளிலும் தற்போது செய்து வருகின்றோம். குரங்குகள் இனத்தைச் சேராத சகிப்புத் தன்மையுள்ள ஏனைய விலங்குகளின் நடவடிக்கைகளும் இதே போன்று இருக்கும் என நம்புகின்றோம்” என மேலும் அவர்கள் தெரிவித்தார்கள்.இந்த ஆராய்ச்சிகள் குரங்குகளில் மேற்கொள்ளப்பட்டாலும், இவற்றிலிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியது நிறையவே இருக்கின்றன. தனது சக குரங்கிற்குத் தனக்குக் கிடைத்தத் திராட்சைப்பழம் கிடைக்கவில்லையே என்பதற்காகத் தானும் உணவ்வ உண்ண மறுத்த ஐந்தறிவு படைத்த குரங்கிற்கே இருந்த நேர்மையுணர்வு ஆறறிவுள்ள மனிதனுக்கு உள்ளதா? சிந்திக்க வேணடிய விடயம் இது.

இன்னும் சில ஆண்டுகளில் மனிதன் செவ்வாய்கிரகத்திலும் தனது காற்சுவடுகளைப் பதிக்கக்கூடும். ஆனாலும், அவன் தனது மூதாதையர்களிடம் (குரங்குகள்) கற்றுக் கொள்ள இன்னும் நிறையவே விடயங்கள் உள்ளன.

***

## குளோனிங்கை ~~தடை~~ செய்யுங்கள்...!

மனிதர்கள் ‘குளோனிங்’ செய்யப்படுவதைச் சர்வதேச ரீதியாகத் தடைசெய்யவேண்டும என்று உலகிலுள்ள பல விஞ்ஞானிகள் குரல் எழுப்பியுள்ளார்கள். பிரிட்டன் உட்பட சில நாடுகளே மனிதக் ‘குளோனிங்கைத் தற்போது தடைசெய்துள்ளன. சில நாடுகள் மனிதக் ‘குளோனிங்’ முறையை மருந்துவ ஆராய்சிகளுக்ுப் பயன்படுத்த வேண்டும் என்று அடம்பிடிப்பதால், சர்வதேச ரீதியாக, இதைத் தடைசெய்ய எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

ஆனாலும், ‘குளோனிங்’ தொழில் நுட்பத்தை மருத்துவத்துறையில் அறிமுகப்படுத்துவதால் அத்துறையில் பெரிய முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். இனம்பெருக்க ‘குளோனிங்’ எனப்படும் முறைக்கு விசேஷமாகத் தடைவிதிக்க வேண்டும் எனச் சர்வதேச முன்னணி ஆராய்ச்சியாளர்கள் அங்கம் வகிக்கும் ‘த இன்ரர்-அக்கடமி பனல்’ எனும் அமைப்புக் கேட்டுள்ளது. குணப்படுத்த முடியாத நோய்களைக் குணப்படுத்த மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்குக் ‘குளோனிங்’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு இந்த அமைப்பு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ‘றோயல் சொசைட்டி’ எனும் அமைபபின் தலைவர் பிரபு மே என்பவர் கூறுகையில், பாதிக்கப் படக்கூடியவர்களின் இயலாமையை மனச்சாட்சி இல்லாதவர்கள் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக ஆவது மனிதர்களில் செய்யப்படும் ‘குளோனிங்’கை அவசியம் தடை செய்யவேண்டும் என்று கூறினார். மனிதனில் ‘ மேற்கொள்ளப்படும் ‘குளோனிங்’ ஆனது தாய் மற்றும் ‘குளோனிங்’ செய்யப்பட்ட குழந்தை இருவரினதும் உடல்நலத்திற்குத் தீங்குவிளைவிக்கக் கூடியது. “முழுவதும் பொறுப்பற்ற செயல்” என்று குழந் தைகளைக் ‘குளோனிங்கை’ செய்வதை வர்ணித்த பிரபு மே அவர்கள் குழந்தையை ஆவலோடு எதிர்பார்க்கும் குழந்தை இல்லாதவர்களை இம்முறை பெரிதும் பாதிக்கக் கூடியது என்று கூறினார்.

கோட்பாட்டு ரீதியில் தாயின் முட்டைக் கலத்தின் கருப்பகுதியிலிருந்து டி.என்.ஏ.ஐ. (Deoxyribo Nucleic Acid) அகற்றுவதன் மூலம் மனிதனை ‘குளோனிங்’ செய்வது சாத்தியமாகலாம். பின்னர் ‘குளோனிங்’ செய்யப்படவேண்டிய மனிதனின் கலத்திலிருந்து எடுக்கப்பட்ட பாரம்பரிய அலகுகளுக்குரிய பொருள்கள் இந்த DNA க்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படும். பின்னர் இந்த முட்டைக்கலம் தூண்டப்படும் போது, அது சாதாரண முளையம் (embryo) போல் பிளவுபட ஆரம்பிக்கும்.

ஒரு தாயின் கருப்பையில் இந்தக் ‘குளோனிங்’ செய்யப்பட்ட கலம் பதிக்கப்படும் முறைகள் ஐ.வி.எஸ் எனப்படும் சிகிச்சை நிலையங்களில் கிரமமாகச் செய்யப்படுகின்றன.

அதே சமயம்

மனிதர்கள் உட்படக் குரங்கினங்களில் உருவாகும் முட்டைகளின் விசேடமான உயிரியல் அமைப்பால், மனிதனைக் ‘குளோனிங்’ செய்யும் முறையானது வெற்றியளிக்காது என இந்த வருடத்தின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆராய்சி முடிவொன்று தெரிவிக்கின்றது.



விலங்கினங்களில் செய்யப்பட்ட ‘குளோனிங்’ பரிசோதனைகள் வெற்றியளித்த போதும், பெரும்பாலான கருத்தரிப்புக்கள் பயனின்றிப் போய்விட்டன. இங்கு ‘குளோனிங்’ செய்யப்பட்ட விலங்கின் குட்டி பிறந்தவுடன் அக்குட்டி யின் ஆரோக்கியம் கேள்விக்குறி ளது. வேற்றுக்கிரக வாசிகள்தான் 25 ஆயிரம் வருடங்களுக்கு முன்னால ‘குளோனிங்’ முறை மூலம் மனிதனை உருவாக்கினர் என நம்பும் அமெரிக்காவிலுள்ள ‘குளோனைட’ என்ற அமைப்பு, கடந்த டிசெம்பர் மாதத்திலிருந்த தாங்கள் ஐந்து ‘குளோனிங்’ குழந்தைகளை உருவாக்கியுள்ளதாகக் கூறுகின்றது. தகுதியான டிஎன்ஏ ஆதாரத்தை அளிக்காததால், இக்கூற்றை ஏற்க விஞ்ஞானிகள் மறுத்துவிட்டார்கள்.






- தாரணி -

உதயன்

# தேர்தல் முறை மாற்றம்; மிகுந்த அவதானம் தேவை

தேர்தல் முறையைச் சீரமைப்பது குறித்து ஆராய்ந்து உரிய சிபாரிசுகளை நாடாளுமன்றத்துக்குள் சமர்ப்பிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

வழமைக்கு மாறாக இதன் தலைவராக எதிரணியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் அரசுத் தரப்பால் நியமிக்கப்பட்டபோது அனைவரும் வியந்துதான் போனார்கள்.

1978இல் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுவதற்கு முன்னர் இலங்கையில் தொகுதிவாரித் தேர்தல் முறையே நடைமுறையில் இருந்தது. ஆனால், 1978 அரசமைப்பின் கீழ் விகிதாசாரத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த விகிதாசாரத் தேர்தல் முறையே நாட்டில் பல அரசியல் குழப்பங்களுக்குக் காரணம் என்றும் அதை மாற்றி தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறைகள் அடங்கிய கலப்புத் தேர்தல் முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் எதிரணிப் பிரமுகரும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவருமான தினேஷ் குணவர்த்தன கருத்து வெளியிட்டபோது அதனைத் தனக்கு சாதகமாக்கிக்கொண்டது அரசுத் தரப்பு.

இது சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அவரையே தலைவராக்கி புதிய தேர்தல் முறைமை குறித்து சிபாரிசு செய்யும் பொறுப்பில் எதிரணியையும் பங்காளியாக்கியது ரணிலின் அரசு.

வழக்கமாக பொது விடயங்களில் எதிரும் புதிருமாக நிலையெடுத்து தங்களுக்குள் மோதிக்கொள்ளும் அரசுத்தரப்பும் பிரதான எதிரணித் தரப்பும் இது விடயத்தில் மட்டும் ஒற்றுமைப்பட்டு, எதிரணிக்காரருக்கே தெரிவுக்குழுவின் தலைமைப் பதவியை விட்டுக் கொடுத்து, இணங்கிப் போனமை சிறுபான்மைக் கட்சிகளுக்கும் சிறுபான்மையினரின் கட்சிகளுக்கும் இயல்பாகவே சந்தேகத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

விகிதாசாரத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட முன்னர் - தொகுதிவாரியாக - நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் எல்லாம், பெரும்பாலும் பெரும்பான்மையினரின் பெரிய கட்சிகள் இரண்டும் மாறி மாறி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைப் பிடித்து வந்துள்ளன. ஓரிரு சமயங்களில் மட்டுமே அரசு அமைப்பதற்கு சிறுபான்மையினரின் அல்லது சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைத் தேட வேண்டிய நிலை அவற்றுக்கு ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல், தொகுதிவாரி முறையின் கீழான பொதுத் தேர்தல்கள் மூலம் - அரசமைப்புகளையே தமக்கு விரும்பியபடி தலைகீழாக மாற்றியமைப்பதற்குப் பொதுவாகத் தேவைப்படும் - மூன்றில் இரு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையை, பெரிய கட்சிகள் இரண்டில் ஏதேனும் ஒன்று பெறும் நிலை கூட ஏற்பட்டது.

ஆனால், தொகுதிவாரித் தேர்தல் முறையின் கீழ் பெரிய கட்சிகள் இரண்டும் மாறி மாறி அனுபவித்து வந்த இந்த உரிமையை - அதிகாரத்தை - அடியோடு தட்டிப்பறித்துவிட்டது விகிதாசாரத் தேர்தல்முறை.

விகிதாசாரத் தேர்தல்களின் கீழ், நாடாளுமன்றத்தில் சாதாரண அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்குக் கூட சிறிய கட்சிகளின் அல்லது சிறுபான்மையினரின் கட்சிகளில் தங்கியிருக்கவேண்டிய இக்கட்டு பெரிய கட்சிகள் இரண்டுக்கும்.

பழைய முறையின் கீழ் போதிய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெறாத முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் தமிழர்களின் சிறிய கட்சிகளைச் சேர்ந்தோர் எனப் பல தரப்பினருக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்தை புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை வழங்கியிருக்கின்றது.


தனித் தனியாகத் தேர்தல் தொகுதி ஒவ்வொன்றிலும் ஐ.தே.கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற பெரிய கட்சிகளை நேரடியாக எதிர்த்துப் போட்டியிட்டு, ஒரு தொகுதியில்தானும் தனித்து அதிகப்படி வாக்குகளைப் பெற்று வெல்ல முடியாத ஜே.வி.பி.போன்றவை கூட, மாவட்ட ரீதியில் பல தொகுதிகளிலும், தேசிய ரீதியில் அகில இலங்கையிலும் கிடைக்கக் கூடிய வாக்குகளை ஒன்று திரட்டி பிரதிநிதித்துவம் வழங்கும் விகிதாசார முறையின் கீழ் கணிசமான எம்.பி.பதவிகளை சுவீகரித்துக் கொள்ளும் நிலைமை வந்துள்ளது.

இதனை ஜீரணிக்கமுடியாத பெரிய கட்சிகள் இரண்டும் - தம்மோடு தேர்தல் கூட்டு வைக்கக்கூடிய - மற்றைய ஒரு சில கட்சிகளுடன் சேர்த்து இந்தத் தேர்தல் முறைக்கே வேட்டுவைக்கத் தீர்மானித்துள்ளன.

தற்போதைய தேர்தல் முறையைக் கண்ணை மூடிக் கொண்டு மாற்றுவது சிறுபான்மையினரின் உரிமையைப் பறிக்கும் செயல் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி கூறியிருப்பது இதனால்தான்.

இந்தத் தேர்தல் முறையை மாற்றுவதற்கு இணக்கம் தெரிவிப்பதற்கு முன்னர் பல கட்சிகளும் - குறிப்பாக சிறிய கட்சிகளும் - சிறுபான்மையினரின் கட்சிகளும் - ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திப்பது நல்லது. உரிமையைப் பறிகொடுக்க இடங்கொடுத்து விட்டுப் பின்னர் முழிப்பதை விட.

## காலத்தின் பதிவு



உலகம் உனக்கும்தான்.... படம் : பிரேம்

யாழ். பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையத்தினால் அண்மையில் செய்திப் புகைப்பட செயலமர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்கள் செயலமர்வின் இறுதிநாளன்று தீவகம், யாழ்.நகரில் முஸ்லிம்களின் பகுதி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பல புகைப்படங்களை எடுத்தனர். இயல்பான வாழ்க்கையையும் இயற்கையையும் பதிவுசெய்வனவாக அந்தப் புகைப்படங்கள் அமைந்தன. அவற்றில் இருந்து சில படங்கள் தொடர்ந்து இங்கே பிரசுரமாகவுள்ளன.

### வடக்கு - கிழக்கில்

# பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஜப்பான் சர்வதேச வங்கி உதவி!

கொழும்பு,ஒக்.8

வடக்கு - கிழக்கில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஜப்பான் சர்வதேச வங்கி முனவந்துள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டமொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு அரச அதிபர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கில் பாரிய, மத்திய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ள இந்த வங்கி நிதி உதவிகளை வழங்கவிருக்கின்றது.

இநத வங்கியின் அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த ஒருவார காலததுக்குள் வடக்கு - கிழக்கிற்கு வருகைதந்து நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பான சேவை மதிப்பீடுகளைச் செய்யவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏதும் இல்லாத காரணத்தால் இக்குழு யாழ்ப்பாணம வரமாட்டாது என்றும் - வனனிசென்று இரணைமடுக்குளம் உட்பட பல குளங்களைப் பார்வையிடும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

# மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண்பதே அவசியம்

## வடக்கு அரச அதிபர்கள் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.8

வடக்கு - கிழக்கில் மீளக்குடியமரும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதுதான் அவசரத் தேவையாக உள்ளது என்று வடமாகாண அரச அதிபர்கள் கூட்டாக அரசிடம் தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் பிரதமரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த உயர்மட்ட மாநாட்டில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

'அழிவில் இருந்து அபிவிருத்தி நோக்கிய பணிகளுக்கான தந்திரோபாய நடவடிக்கைகள்' என்ற தொனிப்பொருளுடன் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐ.நா.வின் கீழ் செயற்படும் அமைப்புகள் இந்தப் பணியில் ஆற்றவேண்டிய பங்கு குறித்து மாநாட்டில் ஆராயப்பட்டது.

இந்த மாநாட்டில் பங்கு பற்றிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் இந்த மாநாட்டின் நோக்கத்தைத் தாங்கள் வரவேற்பதாகவும் -

தற்சமயம் இந்த விடயம் குறித்து ஆராய்வதை விடுத்து, எமது பகுதியில் மீள்குடியமரும் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது பற்றி ஆராய்வதே நல்லது என்றும் - ஒருமித்து கருத்து வெளியிட்டனர்.

மீள்குடிமயரும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறும் நிலையை நீக்க வேண்டிய நடவடிக்கைகளை ஐ.நா. அமைப்புகள் செய்யலாம் என்றும் அரச அதிபர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்த விடயத்தைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட பிரதமரின் செயலாளர், அதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

(ம-3)

### உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள யூனியன் கல்லூரியில்

# ஆசிரியர் தின நிகழ்வில் பங்குபற்ற பழைய மாணவருக்கு அனுமதி மறுப்பு

தெல்லிப்பழை,ஒக்.8

தெல்லிப்பழை உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் இயங்கும் யூனியன் கல்லூரியின் ஆசிரியர்தின விழாவில் பழைய மாணவர்கள் பங்குபற்ற இராணுவம் அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியர் தின கொண்டாட்டங்களை சிறப்பாக நடத்த பல்வேறு ஏற்பாடுகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பாடசாலை பழைய மாணவர் சங்கமும் ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த பழைய மாணவர்கள் அனைவரும் தெல்லிப்பழை இராணுவ முன்னரங்க நிலையில் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. பெற்றோரும் ஒரு சிலருமே இந்நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

முன்னதாக, ஆசிரியர் தினத்தை விமர்சையாகக் கொண்டாட கல்லூரியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் அதற்கான அனுமதி படைத்தரப்பால் இறுதி நேரத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தினத்தன்று காலை 8.30மணிக்கே இந்த அனுமதியளிக்கப்பட்டது. அதுவும் பழைய மாணவர்கள் எவரும் கலந்துகொள்ளக்கூடாது என்னும் நிபந்தனையுடனேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால், மிகவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசிரியர் தின நிகழ்வுகள் சோபையிழந்தன.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலி. வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தமது சிறப்புரையில் இது குறித்து தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

(ம-150)

### நாளை

புரட்டாதி 23
வியாழக்கிழமை
(09.10.2003)
திதி : சதுர்த்தி
நண்பகல் 12.16 வரை
நட்சத்திரம்: உதரட்டாதி
பின்னிரவு 2.27 வரை
பூரணை விரதம்
சுபநேரம்: 07.32 - 09.02
ராகுகாலம்: 1.32 - 03.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நீர்மேல் தோன்றும் குமிழியைப் போன்றதே இளமைப் பருவம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இரத்தினசிங்கம் பிரதாப் என்பவருடைய தே.அ.அட்டை (இல.842651220V), வி. அ.அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், வங்கி அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 01.10.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.19, பஸ் நிலையம் முன்பாக யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (23414)

### வீடும், காணியும் விற்பனைக்கு

நீர்வேலி வடக்கில் வீட்டுடன் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மாலா, பஸ்தியான் ஹொட்டல், இல.34, கண்டி வீதி.
T.P.:222 2605. (23369)

### வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். றோட், உப்புமடப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு, 5 பரப்புக்காணியுடன் விற்பனைக்கு உண்டு. (வீடு, காணி பிரித்தும் கொடுக்கப்படும்).
தொடர்பு: 071 234 7564.(23410)

தரமான ஓடுகள், சீற் வகை
(யானை மார்க்)
**விற்பனைக்குண்டு**

**எமது வலி. கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரமான ஓடுகள், கூரைசீற், தட்டைசீற் ஆகியன மொத்தமாகவும், சில்லறையாவும் விற்பனைக்கு உண்டு. தொகையாகப் பெறுபவர்களுககு வாகனவசதி செய்துகொடுக்கப்படும்.**
(24-11-14) (C/30554)

### திருமண சேவை

1958, அச்சுவினி, செவ்வாய்1, பாவம் 60, **M.Sc. Computer Engineer U.K.,** சைவபோசன மணமகனுக்கு 1965இற்குப் பிந்திய, படித்த மணமகளும் 1978, விசாகம், கணக்காளர், **Australia** மணப்பெண்ணுக்குப் படித்த மணமகனும் தேவை. இருவருக்கும் **Sponcer** உண்டு. தொடர்புகளுக்கு: துரைவிமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(23192)

### மணமகன் தேவை

யாழ். சைவ கௌரவ குடும்பம், 1972இல் பிறந்த, புரட்டாதி நட்சத்திர, அழகிய, கணித டிப்ளோமா பட்டதாரி ஆசிரியைக்கு பட்டதாரி அல்லது அரச உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: விள.இல. 2066, மே/பா உதயன். (23416)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை, வட்டாரம் 7 இல், சிவன்கோயில் வீதியில் 3 பரப்பு 2 குளி, 3 பரப்பு 16 குளிகள் கொண்ட இரண்டு காணிகள் உடனடியாக விற்பனைக்குண்டு. தனித்தனியாகவோ, ஒன்றாகவோ கொள்வனவு செய்யலாம். விவரங்களுக்கு: வை. விஜயபாஸ்கரன், இல.24, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.
T.P.:077 6116877. (23371)

**யாழ்-கொழும்பு போக்குவரத்து சேவை**

தினசரி யாழ்-கொழும்பு பயணிகள் வான் சேவையும் (பயணிகள் கட்டணம் 900/=) லொறியில் பொருட்கள் அனுப்பும் சேவைகளை நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஒழுங்குபடுத்தலாம்

ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்

| | |
|---|---|
| கொடிகாமம் வீதி, நெல்லியடி, 021-226-3500, 0777-271478 | கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13, 01-2478444, 01-2478443 |

### உதவக் கோரிக்கை

யுத்த நடவடிக்கை காரணமாக சேதமடைந்த தமது அங்கத்தவர்களின் வீடுகளைப் புனரமைத்துத் தருமாறு கோரி கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தினர் இந்து கலாசார அமைச்சரிடம் மகஜர் ஒன்றை அண்மையில் கையளித்துள்ளனர். சேத விவரங்களைக் கேட்டறிந்த அமைச்சர் விரைவில் உதவிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (ம-75)

### பங்குத் தந்தையர் நியமனம்

நாவாந்துறை பங்குத்தந்தையாக வண.பிதா எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் யாழ். ஆயரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் தொடக்கம் இங்கு தமது இறைபணியைப் புரிந்து வருகிறார். இதுவரை காலமும் நாவாந்துறைப் பங்குத் தந்தையாக இறைபணி புரிந்த வண. பிதா பீற்றர் துரைரட்ணம் அடிகளார் யாழ். ஆயர் இல்லத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.(எ-51)

* * *

குருநகர் பங்குத் தந்தையாக வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டு இறைபணிபுரிந்து வருகிறார்.

குருநகர் பங்குத் தந்தையாக இதுவரை இறைபணிபுரிந்த அருட்கலாநிதி எஸ்.ஜெயசேகரம் அடிகளார் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார்.(எ-51)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



பூமி மடியில் 25 - 07 - 1957

ஆண்டவன் அடியில் 29 - 09 - 2001

**இளையதம்பி கணேசலிங்கம்** (தேவா)
[இளையதம்பி அன்சன்ஸ், ஜெனா மெற்றல் கிறசர், சஜெந்தன் லொறி உரிமையாளர்]

*கடமைகள் ஒவ்வொன்றாய் நிறைவு செய்த போதும் - நாம்*
*எண்ணவில்லை இதுதான் தங்கள் வாழ்வின் இறுதிப்பொழுது - என்று*
*இன்னும் நீங்கள் விழுதெறிந்து வேர் விடுவீர் என்றிருக்க*
*கடமை எல்லாம் முடிந்தது என மறைந்து விட்டாலும்*
*எப்போதும் எங்கும் எதிலும் எல்லாமாக நீங்கள்*
*வரவேண்டும் அப்பா தொடர்ந்து தங்கள் ஆசி*
*எங்கட்குக் கிடைக்கட்டும்!*

*மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.*

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**

(23417) (24-11-14)

## அஞ்சலி நிகழ்வும் உருவப் படங்கள் திரை நீக்கமும்

அண்மைய இராணுவ அசம்பாவித நிகழ்வுகளில் பல வகையிலும் பாதிக்கப்பட்டிருந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் மீள்செயற்பாட்டிற்காக அயராது பணியாற்றியவரான

**அமரர் மா.இரத்தினசிங்கம்**
*(தலைவர், பணிப்பாளர் சபை)*

அவர்களின் ஞாபகார்த்தமாக ஓர் அஞ்சலிக் கூட்டம். அத்துடன், முன்னாள் தலைவர்கள் **அமரர் சோ.க.வேலாயுதர், அமரர் கா.சந்திரராசா** ஆகியோரதும் நீண்டகாலம் பணியாற்றிய **அமரர் வைத்தியகலாநிதி N.T.சம்பந்தன்** அவர்களதும் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.

காலம்: 09.10.2003 வியாழன் பி.ப.3.00மணி
இடம்: *பணிப்பாளர் சபை மண்டபம்*
தலைமை: திரு. செ.கேசவராஜன்
*(பணிப்பாளர் சபைத் தலைவர்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்.**
(23411) (24-11-14)

**பணிப்பாளர்களும், பணியாளர்களும்.**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1947 - 09 - 04



விண்ணில் 1999 - 09 - 23

**அமரர் சின்னத்தம்பி கந்தசாமி**

ஊர் போற்றும் உத்தமரே!
நீர் விண்ணுலகு சென்று
நாலாண்டு சென்றதோ? - இல்லை
நித்தமும் எம்முடனே இருக்கின்றீர்
மறுபிறப்பிலும் எமக்குத் தந்தையாய்
வர வரம் வேண்டி,
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.*

*பிரிவால் வாடும்:*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*எருவன், கொடிகாமம்.* (23412) (24-14-11)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவமயம் பார்வதி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமயம் பார்வதி நேற்று (07.10.2003) செவ்வாய்க்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருவம்பலம் சிவமயம் அவர்களின் அன்பு மனைவியும் அமரர் இராமஜெயம் அவர்களின் மைத்துனியும் ஸ்கந்தமயம் (Action Contrela Faim) திருவம்பலமயம், சிவபதி அம்மாள், அருள்மயம், மகாமயம், லிங்கமயம் ஆகியோரின் அன்புத் தாயாரும் லீலாவதி, லோகேஸ்வரி, பத்மநாதன் (உதவி பொறியியலாளர், இலங்கை மின்சார சபை - சுன்னாகம்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை, வட்டு. இந்துக் கல்லூரி) சாவித்திரி, ஜெயரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவலன், ஆதிபன், சிறிராம், றம்மியா, அகிலவன், ரகுராம், சிவரோசன், நவநீதா, சிவவிதுசன், நர்மதா, சிவராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி இரத்தினேஸ்வரி (மலேசியா) அவர்களின் சகலியும் கணேசன், கணேஸ்வரியின் (மலேசியா) பெரிய தாயாரும் காலஞ்சென்றவர்களாகிய நாகலிங்கம், திலகவதியார், தங்கம்மா, சிவக்கொழுந்து, அன்னம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2003) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் வழுக்கையாறு இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராம்ராஜ்," சித்தங்கேணி.* (23415) (24-11-14)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## NORTH EAST TECHNOLOGIES[NET],

No.34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA
Tele: 021- 2223786, 0777-708498(Hot line), fax: 021 - 2226077
Web site: www.net.slt.lk



Computers to suit your BUDGET

CADDY SHACK
Computers made In Expencive

*NEW ARRIVALS FROM USA*

| | | | |
|---|---|---|---|
| P I - 166Mhz | 1.2GB HDD | 32MB RAM | Rs. 13,500/= |
| P I - 200Mhz | 2.1GB HDD | 32MB RAM | Rs. 15,700/= |
| P II - 233Mhz | 3GB HDD | 64MB RAM | Rs. 18,700/= |
| P II - 266Mhz | 3GB HDD | 64MB RAM | Rs. 19,800/= |
| P II - 300Mhz | 4GB HDD | 64MB RAM | Rs. 21,700/= |
| PII - 333Mhz | 3.2GB HDD | 64MB RAM | Rs. 22,200/= |
| P II - 350Mhz | 4GB HDD | 64MB RAM | Rs. 23,400/= |
| P III - 450Mhz | 4GB HDD | 64MB RAM | Rs. 32,700/= |
| P III - 550Mhz | 6.4GB HDD | 64MB RAM | Rs. 36, 700/= |
| P III - 600Mhz | 10GB HDD | 64MB RAM | Rs. 39, 900/= |

*THE PRICE IS ALL INCLUSIVE OF 15" SVGA COLOUR MONITOR, BRAND NEW KEY BOARD& MOUSE,PAD, MULTI MEDIA PACKAGE OF 32X CD ROM, SOUND CARD & BRAND NEW SPEAKERS*

**Computer Accessories at attractive prices**

**BRAND NEW MACHINES P-IV-1.2, 1.6,1.8, 2.4.**

24மணி நேர குளிரூட்டப்பட்ட Internet Browsing Centre- Rs.40/= per hour
செலுலர் தொலைபேசி விற்பனை, சேவை, திருத்தவேலைகள்,
unlocking வசதிகள், Net working, LAN.WAN, SOHO, Net2Phone ஆலோசனைகள்
வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் திருமண மற்றும் வைபவங்களை ஒரே நேரத்தில் கண்டுகளிக்க.
Web designing மற்றும் ஆலோசனைகள்
VHS to CD copying வசதிகள் மற்றும் Photo copy, Fax வசதிகள்.
Net2Phone- Rs.7/= per min.

(C-30411) (24-11-14)

# யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்...

## தேர், தீர்த்தோற்சவ திருவிழா சிற...

### அறங்காவலர் சபையின் வாழ்த்து

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்"

என்ற பகவத்கீதையின் வாக்கிற்கிணங்க வல்லிபுர மாயவனின் பக்த அடியார்களே!

உங்கள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம கடந்த புதன்கிழமை புரட்டாதி 7ஆம் திகதி (24.09.2003) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். சம்ஹாரகம் என்று சொல்லப்படுகின்ற தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. நாளையதினம் பாற்கடலில் தீர்த்தமும் நாளைமறுதினம் பட்டுத் தீர்த்தமும் நடைபெற்று மஹோற்சவம் பூர்த்தியாகும். இம் மூன்று தினங்களிலும் வழிபடும் அடியவர்கள் எல்லாவித இக பக சுகங்களையும பெற்று மாயவனின் அருட்கடாட்சத்தில் மூழ்கி புனிதம் பெறுவார்கள் என்பது திண்ணம். எல்லாம வல்ல மாயவனின் அடியார்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சரணம் வல்லிபுரேசா

### வாழ்க்கையே சக்கரந்தான்!

வண்டிற் சில்லும் சக்கரந்தான்!
வடிவான கார்ச்சில்லும் சக்கரந்தான்!
ஊர்ந்து வரும் தேர்ச்சில்லும்,
உருண்டோடுந் நாணயமும்,
தினமுருளும் பூமியும்
பூரணைச்சந்திரனும் சக்கரந்தான்!
புஜ்பமும் சக்கரந்தான்!
பார்க்குமிடமெல்லாமும்
பரந்தாமன் வலக்கரத்திலும்
பார்புகழும் சக்கரந்தான்!
வல்லிபுரத்தில் அமர்ந்திருப்பதும்
சுதர்சன சக்கரந்தான்!
வாழ்க்கையே சக்கரந்தான்!
வலம் வருவோம்! துன்னாலை
வல்லிபுரச்சக்கர மாயவனை!

மாருதி ஆவரங்கால்.

சிறப்புமலர் தொகுப்பு:
த.ஜெயரூபன், ச.யாதவானந்தன்
கற்கோவளம்.

### வண்ணமுறக் காப்பாய் தேவே!

சந்ததமும் தேவரொடு முனிவர் மண்ணோர்
சார்ந்து வழிபாடியன்பைத் தன்மையினால்
அந்தமில்லா ஆனந்த வெள்ளப்பெருக்கில்
சுந்தரமிகுந்த தேரேறி வரும் முகுந்தா
விந்தையிது தானெனவே அடியவர்கள் மீது
வேடிக்கை பார்ப்போமென வேதனை செய்யாது
வந்தெவையும் தீங்காக அணுகா வண்ணம்
வண்ணமுறக் காப்பாய் தேவே!

ஆக்கம் மு.தனிகாசலம்,
கற்கோவளம்.

### அருள்தந்து காப்பாயே!

நற்றவத்தால் கற்கோவளத்து மக்கள்
தொழுது பேணும்
பாற்கடல் வண்ணன் நீராடல் மாட்சியது
மெச்சக் காணும்
பற்பல தேசப்பெரியர் பத்தி மனம்
ஒன்றித் துதிக்க
அற்புதமாய் வல்லிபுரம் அமர்ந்த கோவே
அருள்தந்து காப்பாயே!

ஆக்கம்:மு.தனிகாசலம்
கற்கோவளம்.

### சங்கு சக்கரத்தவனே தந்தை தந்தை வழி வந்த துயர் தீர்ப்பாய்!

ஒரு காலிற் சங்கு ஒரு காலில் சக்கரம்
உள்ளடிபொறித்தமைந்த
இரு காலும் கொண்டு அங்கு அங்கு
எழுதினாற் போல்
இலச்சினை பட நடந்து
பெருகா நின்ற இன்ப வெள்ளத்தின் மேல்
பின்னையும் பெய்து பெய்து
கருகார் கடல் வண்ணன் காமர்தானத்
தளர் நடை நடவானோ
(பெரியாழ்வார்)

அழகிலே உலக மக்களை வியக்க வைத்தவன் மன்மதன். அவனுடைய தந்தை கண்ணன் பாற்கடல் வண்ணன். ஒரு பாதத்தில் சங்கு ரேகையும் ஒரு பாதத்தில் சக்கர ரேகையும் அமையப் பெற்ற திருமால் சக்கரத்து ஆழ்வாராக துன்னாலையின் வல்லிபுரம் பதியிலே அமையப் பெற்ற கோபாலன் கற்கோவளம். பாற்கடலிலே மச்ச அவதாரமாகக் காட்சி தந்த பெருமான் பின்னர் தன் பக்தை வல்லி நாச்சிக்கு அருள் கொடுக்க அப்பெருமாட்டி மடியிலே குழந்தையாகக் காட்சிதந்த மாதவன் சக்கரத்து ஆழ்வாராக இன்று வல்லிபுரத்திலே வல்லிபுர மாயவனாக அருள் பாலிக்கின்றார்.

காத்தற் கடவுளாம் கண்ணபிரான் உடைய மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அவ்வகையிலே பார்த்தசாரதி இன்று இரதமேறி வந்து எம்மக்களின் துயர் துடைக்கவேண்டும். நாட்டில் சமாதானம் மலர அருள் பாலிக்க வேண்டும்.எங்களிடம் மேலோங்கி நிற்கின்ற அகம்பாவம், வஞ்சனை, கோபம், பொறாமை போன்ற கீழான குணங்கள் நீங்கி அன்பு, சகோதரத்துவம், இரக்கம், ஒற்றுமை போன்ற மேலான குணம் மலரவேண்டும்.

எந்தை தந்தை தந்தை தம்
மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழி வழியாட் செய்கின்றோம் திருவோணத்
திருவிழாவில்
அந்தியம் போதில் அரியுருவாகிய அரியை
யழித்தவனை
பக்தனை தீரம் பல்லாண்டு பல்லாயிரத்
தாண்டென்று பாடுதுமே
(பெரியாழ்வார்)

தந்தை தந்தை வழிவழியாக நாம் உன்னை வணங்குகின்றோம். பிரகலாதனுடைய வேண்டுதலுக்காக நரசிம்பனாகத் தோன்றி அருள் பாலித்தவனே! பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்கள் படுகின்ற துயரத்தைத் தீர்க்க எமக்கு அருள் பாலிப்பாய் வல்லிபுர மாயவா!

ச.யாதவானந்தன்
ஆசிரியர்.

### தேர் விவரம்

1. வல்லிபுர ஆழ்வார் தேர் (பெரியதேர்) செய்த ஆண்டு-1957
2. வல்லிபுர ஆழ்வார் தேர் நிர்மாணித்தவர் திருநெல்வேலி விஷ்வபிரம்ம ஸ்ரீ அம்பலவாணர் சபாபதி ஆச்சாரி.
3. அம்மன் தேர் (சிறியது) செய்த ஆண்டு-2003

**அம்மன் தேர் வெள்ளோட்டம் 05.10.2003**

அம்மன் தேர் நிர்மாணித்தவர் ஸ்தபதி விஷ்வபிரம்ம ஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன் குழுவினர் (புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலயம்)

### சமூகப்பணிகள்

1. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலுள்ள மனநோயாளிகளுக்கு சிற்றுண்டி ஏனைய உடுபுடைவை வழங்கி வருகின்றமை.
2. வடமராட்சியில் வதியும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் வசதிக்காக மந்திகையில் ஒரு கணனிக்கல்வி நிறுவனம் இயங்கி வருகின்றமை (250 பேர் கல்வி பயில்கின்றனர்)
3. வடமராட்சியிலுள்ள வசதிகுறைந்த 100 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றமை.
4. பாடசாலை மாணவர்களுக்கிடையே பண்ணிசைப் போட்டி, திருப்பாவைப் போட்டிகள் நடத்தி பரிசில் வழங்குதல்
5. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு (50 பேர்) சமயக் கல்வி புகட்டலும் சீருடை, உணவு வழங்கி வருகின்றமை
6. அழிந்து போகவிருந்த ஏகாதசிப்புராண நூலை வெளியிட்டமை
7. பொருளகளும், பணமும் சமூக நிறுவனங்களுக்கு அன்பளிப்பு செய்து வருகின்றமை.
8. பக்தர்களின் நலனுக்காக அன்னதான மடங்களை ஏற்படுத்தி அன்னதானம் செய்து வருகின்றமை.
9. கருடபகவான் (வரலாறு) - பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குருக்கள்


தேரேறி வரும் மாயவா
எம்மை பார் போற்ற வாழவைக்கும் கோபாலா
சுவர்ண மஹால்
பிரதான வீதி, நெல்லியடி.
அழகிய தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

தேரேறி வரும் மாயவனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.
ராகுல சூரியன்ஸ் புடைவை அகம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

வல்லிபுர மாயவனின் அருள் வேண்டி நிற்கின்றோம்
நியூசன் ஆபரண மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.
அழகிய தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

வல்லிபுர மாயவனின் அருள்வேண்டி நிற்கின்றோம்
லவ்லி கூல்பார்
லவ்லி றெக்கோடிங் சென்டர்
லவ்லி றெஸ்ரூறன்ட்
பிரதான வீதி, நெல்லியடி.

கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வருகின்றான்
வைஸ்ணவி நகைப்பூங்கா
பிரதான வீதி, நெல்லியடி.
நீடித்து நிலைக்கும் தரமான நகைகள் பெற்றுக்கொள்ள தவறாமல் நாடுங்கள்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் கிடைக்க வணங்கி நிற்கின்றோம்
சிவராஜ் ரேடிங்கோ
பிரதான வீதி, பருத்தித்துறை.

இன்று தேர் உலா வரும் மாயவனின் அருள் கிடைக்க வணங்கி நிற்கின்றோம்
பவானி நகைமாடம்
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும் ஸ்தாபனம்.

இன்று தேர் உலாவரும் வல்லிபுர மாயவனின் அருள்வேண்டி நிற்கின்றோம்
S.P.M. ஓவ்செற் பிறின்ரேஸ் கொமினிக்கேசன்
வீ.எம்.றோட், பருத்தித்துறை.
T.P.No. 021 222675

அலை யோங்கும் கடலோரம் நிலைகொண்ட மாயவனே போற்றி
கருணா ஸ்ரோர் பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, நெல்லியடி.

வங்கக்கடலில் அவதரித்த கண்ணன் வண்ண தேர் ஏறி வருகிறான்
ஜனனி பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, நெல்லியடி.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் கிடைக்க வணங்கி நிற்கின்றோம்.
டோறா என்ரபிறைசஸ் கொமினிக்கேசன் அன்ட் வீடியோ சீடி மல்ரி கொம்பினேக்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி.
எமது சேவைகள் :- சிற்றாட் போட்டோகொப்பி - லெமினேற்றிங், கைத்தொலைபேசி உபகரணங்கள், அழகுசாதனப் பொருள்கள்.

தேரேறி வரும் மாயவனின் அருள்வேண்டி நிற்கின்றோம்.
மெற்றோ வைன் ஸ்ரோர்
பிரதான வீதி, நெல்லியடி.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் அனைவரும் பெற்றிட வேண்டி நிற்கின்றோம்.
கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
நெல்லியடி, கரவெட்டி.
எமது சேவைகள் : புகர்ச்சி நிவாரண விநியோகத்துடன் வாடகை சேவை, ஒப்பந்த சேவை, பாலர் கல்வி, கிராமிய வங்கிச்சேவை

கல்லான அகலிகையைக் காத்திட்ட கண்ணன் வண்ண தேர் ஏறி வருகிறான்
செல்லமுத்துஸ் புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.

# நினைவஞ்சலி

18ஆவது ஆண்டு | நான்காவது ஆண்டு

தோற்றம் 01 - 10 - 1970 | மறைவு 01 - 07 - 1985



தோற்றம் 08 - 03 - 1940 | மறைவு 08 - 10 - 1999



செல்வி
**கலைச்செல்வி தர்மலிங்கம்**

திருமதி
**மகேஸ்வரி தர்மலிங்கம்**

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, கணவர்
சி.தர்மலிங்கம்

கல்வயல்,
சாவகச்சேரி. (23380) (26-24-11-15)

## சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.8

சர்வதேச அஞ்சல்தின வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ் மாவட்ட பிரதம அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு மாவட்ட, மாகாண மட்டங்களில் நடத்தப்பட்ட சித்திர, கட்டுரை, முத்திரை சேகரித்தல் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் அன்றையதினம் வழங்கப்படவுள்ளன. (ம-12)

# அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



துன்னாலை வடக்கைச் சேர்ந்த
அவ்வூர் கிராம அலுவலர்
**திரு.சோமநாதர் சிவராசன்**
அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவான் மற்றும் கிராம அலுவலர் தரத்தின் அதியுயர் பதவி (சுப்ரா) பெற்றமையைப் பாராட்டி அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம். இவர், துன்னாலை புளியங்கியான் பிள்ளையார் தேவஸ்தான திருப்பணிச் சபை முன்னாள் தலைவரும் பருத்தித்துறைப் பிரதேச செயலக நலன்புரிச் சங்க செயலாளர், செயலக காணிக்கொள்வனவுச் சபை உறுப்பினருமாவார். தாம் பணிபுரிந்த இடமெல்லாம் ஆன்மீகம் சிறக்க, பொதுப்பணி மன்றங்கள் வளர அரும்பணியாற்றிய அவரின் சேவை மேலும் மேன்மையுற வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (சி-30581) (24-11-15)

திரு. திருமதி தம்பையா
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 06 ↓ 10 ↓ 1937



மறைவு 09 ↓ 09 ↓ 2003

**அமரர் கணபதி இரத்தினம்**

தந்தை சொல்மிக்க மந்திர மில்லையென்ற
தாரக மந்திரமாய் விளங்கிய தந்தையே!
சிந்தையிலே கோயில் வைத்து எந்நாளும்
சிரம் தாழ்த்தி நாம்காணும் தெய்வமே!

நாளை (09.10.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

இராசிங்கம் வீதி,
கரவெட்டி மேற்கு. (23396) (24-11-15)

# நெஞ்சு விட்டு நீங்காத நினைவலைகள்

ஐந்தாம் ஆண்டு | முதலாம் ஆண்டு

மண்ணக வரவு 30 - 05 - 1928



விண்ணக விரைவு 07 - 09 - 1998

மண்ணக வரவு 10 - 02 - 1937



விண்ணக விரைவு 20 - 09 - 2002

அமரர் முருகேசு இராஜேந்திரம்

திருமதி தங்கம்மா இராஜேந்திரம்
திதி: சதுர்த்தசி 08.10.2003

ஆசையோ டைமைப் பெற்றெடுத்து,
பாசமதை ஊட்டி வளர்த்தெடுத்து,
ஞான ஒளி பாய்ச்சியெமை வாழ வழிகாட்டிவிட்டுப்
போன எங்கள் தெய்வங்களே! - உங்களை
நாங்கள் நினைவு கூருகின்றோம்!

"நிலாதாரகை"
ஆலங்கட்டை,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (23377) (24-11-19)

அன்புப் பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்.

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**க.செல்வராசா**
(உரிமையாளர், உதயன் மரக்காலை)
மண்ணுலகில் : 1954.12.18
விண்ணுலகில்: 1993.09.28

செல்வி
**செ.சு[illegible]ாத்தா**
(சாவகச்சேரி இந்து கல்லூரி O/L மாணவி)
1977.07.20

செல்வி
**செ.யசோதா**
(சாவகச்சேரி மகளிர் ம.வி. உயர்தர உயிரியல் பிரிவு மாணவி)
1976.06.29

திதி: 2003.10.08

நீவீர் மூவரும் மண்ணை விட்டு விண் சென்ற
நாளிலிருந்து ஆண்டுகள் பத்து ஆகினவே-உம்மை
எண்ணியெண்ணி ஏங்கி நாம் நிதம் இங்கு அழுகின்றோம்.
கண்ணிலிருந்து கண்ணீர் வெள்ளம் ஆறாய் ஓட
உங்களை நினைவு கூருகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி :செ.மங்கையர்க்கரசி
(பிரான்ஸ்)

திரு.திருமதி உதயன் அனுஷா (கனடா)
மகன், மருமகள், மச்சாள்.

(C/30520)

# நாளைய சமூக சிருஷ்டிகள் இன்றைய இளைஞர்களே!

*"ஒரு தேன் கூட்டையொத்த இந்நகரில், நெரிக்கும் நெரிசலையும், இடைவிடாத இரைச்சல்களையும், முடிவில்லாத முணு முணுப்புக்களையும், தாங்கிக் கொண்டு வசிக்கும் இந் நகர வாசிகள், என் இரக்கத்திற்குரியவர்கள்".*

*- ஆபிரஹாம் கௌலி.*

உண்மையில் யாழ். நகர வாசிகளும் இரக்கத்திற்குரியவர்களே! யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக வன் முறைச்சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன என்பது அனைவருக்கும் தெள்ளத்தெளிவாகத் தெரிந்ததே! கொலை, கொள்ளை, கோஷ்டி மோதல் அப்பப்பா....! யாழ்ப்பாணத்தின் நாளைய நிலைமை என்ன என்பது கேள்விக்குறியாகிறது. யாழ். மண்ணானது கல்வி, கட்டுப்பாடு நிறைந்தது. ஆனால், இன்றைய காலப்போக்கில், இவையெல்லாம் காற்றில் பறக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

'இன்றைய இளைஞர்களே நாளைய சமூகத்தின் பொறுப்புமிக்க தலைவர்கள்'. அத்தகைய இளைஞர்கள் வீதிகளில் நேரத்தை வீணாக்குவது விமர்சனத்திற்குரியதே! வீதிகளிலும் சந்திகளிலும் நின்று பெண்களைக் கிண்டலடிப்பதும், சேஷ்டைகள் செய்வதும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஆங்காங்கே கோஷ்டி மோதல்கள். இப்படியான இளைஞர்களின் போக்கிற்குரிய காரணம் என்ன? உதவாத ஓர் இளைஞர் சமுதாயம் உருவாகிக் கொண்டிருப்பதற்குரிய காரணம்?

இவற்றிற்குத் தீர்வு என்ன?

உண்மையில் இவற்றுக்கிடையில் பொறுப்புமிக்க சில இளைஞர்களும் இருக்கின்றார்கள் என்பதும் மறுப்பதற்கில்லை.

முதலில் எமது வாழ்க்கையைப் பற்றி ஒரு தெளிவு இருக்கவேண்டும். அத்துடன், வாழ்க்கையில் எப்போதும் இலட்சியம் வேண்டும். அந்த இலட்சியத்தினை கருத்திற்கொண்டு செயற்பட்டால் வீணான பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். அந்த இலட்சியம் சரிவர நிறைவேற வேண்டும் எனில் நம்பிக்கை வேண்டும்.

உலகில் உள்ள இலட்சியக் கடைமையை நிறைவேற்ற விரும்பும் மனிதன் ஒரு குறிக்கோள் கொண்டவனாக, அனைத்தையும் மிஞ்சும் வலிமை மிக்க ஒரே குறிக்கோள் கொண்டவனாக, தன் வாழ்வு முழுவதிற்கும் வழிகாட்டி ஆண்டு ஆட்கொள்ளும் தலையாய இலட்சியம் ஒன்றே கொண்டவனாக இருக்கவேண்டும். இப்படியான எமது இலட்சியம் நிறைவேற வேண்டுமெனில் நல்ல நண்பர்களின் சேர்க்கை வேண்டும்.

ஒரு மனிதன் நல்லவனாகவும், கெட்டவனாக மாறுவதற்கும் நண்பாகளின பங்கு செல்வாக்குச் செலுத்துகிறது. எனவே, நல்ல நண்பர்களுடன் உறவு வைத்துக்கொள்ளவேண்டும்.

'நல்லவர்களுடன் எந்த அளவு நெருங்கிய உறவு கொள்கிறோமோ, அந்த அளவு சிறந்தது உன் தன்மை - என்கிறார் PIOTUS.

அடுத்து தரங்கெட்ட தென்னிந்திய திரைப்படங்களின் செல்வாக்கு, உண்மையில் ஒருசில திரைப்படங்களைத் தவிர மிகுதி அனைத்துமே வியாபார நோக்கை அடிப்படையாகக் கொணடு தயாரிக்கப்பட்டவை. இத்திரைப்படங்களும் இன்றைய இளைஞர் சமுதாயத்தை நெறிபிறழச் செய்கின்றன என்றால் மிகையாகாது.

அடுத்து பெற்றோர் பிள்ளைகளைக் கண்டித்து புத்திமதி கூறி அவர்கள் போக்கிலேயே விட்டுவிடுவது. தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்றாலும் உரிய சந்தர்ப்பத்தில் அவர்களைக் கண்டிக்கவேண்டும். அவர்களின் நடவடிக்கைகளை கவனித்துக்கொள்ளவேண்டும். பெண்கள்தான் மாலையில் குறிப்பிட்ட நேரத்திற்குள் வீட்டிற்கு வரவேண்டும் என்று அல்லாமல், ஆண்களும் வீதியோரங்களில் நிற்காமல் தத்தம் வேலைகளை முடிய வீட்டிற்கு வந்தால் கோஷ்டி மோதல் போன்ற பிரச்சனைகளுக்கு விடிவு கிட்டும் என்பது மறுப்பதற்கில்லை. இந்த இளவயதில் இரத்தம் சத்தம் போடும். நான் செய்வது தான் சரி எனும் இறுமாப்பு. பக்க விளைவுகளைப்பற்றி, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க, அறிவுரைகளை ஏற்க, மறுக்கின்ற வயது.

அடுத்து முக்கியமான விடயம் கடவுளிடத்தில் நம்பிக்கையும், அதே சமயம் பயமும் இருக்க வேண்டும். அறிவு இயல்பாக மலர வேண்டும். தியானத்தில் புலமை உண்டாகும்.

எனவே, நாம் வாழ்வை ஒரு நொடிகூட வீணாக்கக்கூடாது. ஒரு காரியம் செய்யுமுன், 'நாம் ஏனிதைச் தைச் செய்கிறோம்; இது நமக்குரியதா? அருட்பயனுடையதா என்று வினவவேண்டும். வாழ்க்கையில் பிழைகள் விடுவது மனித இயல்பு, அதனை உணர்ந்து எப்போது திருந்துகிறோமோ, அப்போது மனிதம் உயர்ந்து நிற்கிறது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இளைஞர்களே அதிகமாக செல்வாக்குச் செலுத்துகின்றார்கள். எனவே, இளைஞர் தேவையற்ற வேலைகளை விட்டு கணனித்துறை, விளையாட்டுத்துறை, கலைத்துறை என்பவற்றில் ஆர்வங்காட்டி தமது கல்வி, இலட்சியத்தில் கவனத்தைத் திருப்பினால் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்து ஓர் ஒழுங்கான சமுதாயத்தினை உருவாக்கலாம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

"நாமும் கூட இன்று புதிதாய்ப் பிறக்கலாம்"

**இ.வித்தகி**

# வாசகர் திருமுகம்

## பெற்றோர்களின் மறுபக்கம்

கடந்த முதலாம் திகதி உதயனில் 'இது உன் நெஞ்சை தொடுமா? சுடுமா?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வாசித்தேன். எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய்த்தான் வந்தது. 'முதியோர்கள் காலச் சக்கரத்தின் கடமைகளை முடித்துவிட்டு கால தேவனுக்காய் காத்திருக்கும் கட்டைகள்' என கட்டுரை தொடங்குகிறது. அவர்கள் காலச்சக்கரத்தின் கடமைகளை சரிவர நிறைவேற்றினார்களா என்பது கேள்விக்குறி. அவர்கள் இளம் பருவத்தில் பெற்றோர்களாக இருந்தபோது தங்கள் பிள்ளைகளின் உணர்ச்சிகளை, விருப்பு வெறுப்புக்களை மதித்து அநேகமாக நடந்திருக்கமாட்டார்களென்பதே என் தாழ்மையான அபிப்பிராயம். ஆசிரியரே தற்போது நீங்களும் பெற்றோர் ஸதானத்தில் இருப்பதானால் என் கருத்துக்கள் உங்களையும் உறுத்தத்தான் செய்யும். என்ன செய்வது. யதார்த்தம் என்று ஒன்று இருக்கிறதல்லவா?

கல்வித்தானத்தை எடுத்துக்கொண்டால் பெற்றார் தங்கள் பிள்ளைகள் நன்றாகப் படித்து டாக்டராகவோ, எஞ்சினியராகவோ அல்லது கணக்காளராகவோ வரவேண்டுமென்றுதான் விரும்புவார்கள். இந்நிலைமை வேண்டத்தகாத விளைவுகளை அந்தப் பிள்ளைகள் மனதில் ஏற்படுத்தி விடுகின்றது. சில பிள்ளைகளுக்கு சங்கீதத்துறைகளில் நாட்டமிருக்கும். அல்லது சினிமாத் துறைகளில் நாட்டமிருக்கலாம். அல்லது வேறெந்தத் துறைகளிலாவது நாட்டமிருக்கலாம். சில பிள்ளைகள் விளையாடுவதற்கோ அல்லது சந்திக்கவரும் நண்பர்களிடம் அரட்டையடிப்பதற்கோ பெற்றோரால் அனுமதிக்கப்படுவதில்லை. எந்நேரமும் 'படி படி'யென்று நிர்ப்பந்தித்தவண்ணமிருப்பார்கள். தங்கள் எதிர்பார்ப்பை பிள்ளைகளில் திணித்தவண்ணமிருப்பார்கள்.

உணவுப் பழக்கவழக்கங்களை எடுத்துக்கொண்டாலும் இதே நிலைமைதான். தங்கள் உடலுக்கு ஒத்துப்போகக்கூடிய உணவுகளையே அவர்களும் உண்ணவேண்டுமென்று வற்புறுத்துவார்கள். இதனால், பெற்றோர்கள் மீது இயல்பாகவே பிள்ளைகளுக்கு வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் உண்டாகிறது. பெற்றோர்களென்றாலே பயங்கரமானவர்கள், வெறுத்து ஒதுக்கத்தக்கவர்கள் என்ற எண்ணம் அந்தப் பிள்ளைகளுக்கு ஏற்பட்டு விடுகிறது.

வாழ்க்கைப் பிரச்சினையிலும் இதே நிலைதான். சிலபெற்றோர் தங்கள் பிள்ளைகள் திருமண பந்தத்தில் ஈடுபடாமல், தங்களைக் கடைசிவரை உழைத்துக்காப்பாற்ற வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள். ஏதோ தாங்கள் சிரஞ்சீவியாய் வாழ்ந்து தங்கள் பிள்ளைகளின் ஆயுள் முழுவதும் அவர்களை தாங்கள் கண்காணித்துக்கொள்ளப்போவது மாதிரி. இதுவே மிகப் பயங்கரமான தாக்கத்தினை அவர்களில் ஏற்படுத்திவிடுகிறது. காதல் விவகாரம் (சாதிமுறை மாறி விவாகம் செய்தல்), முறையற்ற கருத்தரிப்பு போன்ற இன்னோரன்ன விவகாரங்களும் இதனால் ஏற்படுகின்றன.

ஆகையால், ஆசிரிய ஐயா அவர்களே! நீங்கள் நாணயத்தின் ஒருபக்கத்தைத்தான் பார்க்கிறீர்கள். மறுபக்கத்தையும் பார்க்க முயற்சியுங்கள். பெற்றோரால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள்தான் தங்களுக்கு ஒரு காலத்தில் பெற்றோர் இருந்தார்கள் என்பதை மறந்து செயற்படுபவர்களாக உள்ளனர். பெற்றோரையே மறப்பவர்கள் அவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வதெங்ஙனம்? இன்று வயோதிபத்தின் விளிம்பில் நின்று, தங்கள் பிள்ளைகள் தங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லையே என கண்ணீர்விடும் பெற்றோர், இளமைக் காலத்தில் தங்கள் அடக்கு முறை காரணமாக தங்கள் பிள்ளைகள் மௌனமாகக் கண்ணீர் சிந்தியதை அறிவார்களா? ஆனால், சில பெற்றோர் தங்கள் பிள்ளைகள் உணர்ச்சிகள், விருப்பு வெறுப்புக்களைப் புரிந்துகொண்டு நடக்கின்றனர். ஆனால், இவை நூற்றுக்கு 10 வீதத்துக்கும் குறைவானதாகும். இவர்களே தங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இறுதிக் காலத்தைக் கழிக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஏனைய பெற்றோர் அந்திம காலத்தில் கட்டைகளாகவே இருந்து விட்டுப்போக வேண்டியதுதான். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

"அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்று கொல்லும்" இவை முதுமொழிகள்.

**- த.இராசகுலேந்திரன்.**

## முன்வருவார்களா?

அண்மையில் கோப்பாயில் உள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள பிரதான வாயிலில் 'தடை' என்ற தலைப்பில் விளம்பர அட்டை தொங்கியவாறு தென்பட்டது. அதனைக் கிட்டச் சென்று பார்க்கும் ஆவல் மேலிடவே அருகில் சென்று படித்தேன். அதில் உள்ள வாசகங்கள் என்னை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்குவனவாக அமைந்திருந்தன. கல்லூரி வளாகத்துக்குள் சகலவிதமான பொலித்தீன் பைகளையும் தடைசெய்வதான வாசகங்களே அவையாகும். பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனின் முன்மாதிரியான செயற்பாட்டைக் கண்டு உண்மையிலேயே மனதாரப் பாராட்டினேன். நிலக்கண்ணிகள், மிதிவெடிகள் முதலானவை போலவே இந்தப் பொலித்தீன் தயாரிப்புக்களும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு அச்சுறுத்தலாக அமையப்போவதை உணர இன்னும் வெகுகாலம் தேவைப்படாது. பீடாதிபதியின் முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் இவ்வாறு 'தடை' நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் பீடாதிபதியின் தடை நடவடிக்கைக்கு உணர்வுபூர்வமான ஒத்துழைப்பை வழங்கிவருவதை நாம் எல்லோரும் மனதாரப் பாராட்டவேண்டும். பீடாதிபதி பூனைக்கு மணிகட்டியுள்ளார் நீங்களும் முயற்சி செய்யுங்களேன்.

**- கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்.**

# அமெரிக்க லொத்தர் விஸா: இம்முறை புதிய நடைமுறை

ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் அமெரிக்க நிரந்தர வதிவிட விஸாவுக்கான விவரங்கள் எதையும் இன்னமும் காணவில்லையே என்று பலரும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் விசாரித்தபோதும் 'அது பற்றிய தகவல் தங்களிடமில்லை' என்கிறார்கள். அப்படியானால் அந்த நடைமுறை இம்முறை இல்லையா? அல்லது ஒத்திவைக்கப்பட்டிருக்குமா? இப்படி எண்ணிக்கொண்டிருக்கையில் தான் அதுபற்றிய புதிய தகவல்களை இணையம் மூலம் வெளியிட்டிருப்பதை அறியமுடிந்தது.

ஆமாம், DV-2005 இம்முறையும் உண்டு. அதிலே இலங்கையர்களும் பங்குபெறலாம். இந்த முறை ஒக்ரோபருக்குப் பதில் நவம்பர் முதலாம் நாளிலிருந்து டிசெம்பர் 30ஆம் நாள் வரையிலான 60 நாள்களை அதற்கென ஒதுக்கியுள்ளனர். விபரங்களைப் பெறுவதற்கும் விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதற்கும் மின்மயப்படுத்தப்பட்ட பின்வரும் இணைய இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்: www.devlottery.state.gov தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இத்திட்டத்தின் ஏனைய நடைமுறைகள் அநேகமாக வழக்கம் போலத்தான்.

கல்வித் தகைமையைப் பொறுத்தவரை இம்முறையும் உயர் வகுப்பு (HIGH SCHOOL EDUCATION) அல்லது அதற்குச் சமமான பெறுபேறு அல்லது இரண்டு ஆண்டு தொழில் அனுபவம் என்றிருக்கிறது. இத்தகுதி இல்லாதவர்கள், அவர்கள் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றாலும் நேர்முகத் தேர்வின்போது தோல்வியைத் தழுவநேரலாம். அத்துடன், நேர்முகத் தேர்வுக்கு முன்னர் செலுத்திய பெருந்தொகைப் பணத்தையும் இழக்க வேண்டியிருக்கும். எனக்குத்தெரிய இத்தகைய அனுபவங்கள் சென்ற முறையும் பலருக்கு ஏற்பட்டிருக்கின்றன.

நிழல் படம்: 2"X2" இணைப்பதிலும் மிகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. டிஜிட்டல் முறையில் எடுக்கப்பட்ட அல்லது அப்படிச் செய்யப்பட்ட நிழல்படத்தினை விண்ணப்பத்தில் பதிவுசெய்ய வேண்டும். (The image file can be produced either by taking a new digital photograph or by scanning a photographic print with digital scanner.)

இதற்கு ஒருவர் தாமாகவும் விண்ணப்பிக்கமுடியும் அல்லது அவருக்குப் பதிலாக இன்னொருவரும் விண்ணப்பிக்கலாம். இந்த முறை கையொப்பம் கூட அவசியமில்லை. இருப்பினும் ஒருவரின் பெயரில் ஒரு விண்ணப்பமே தாக்கல் செய்யமுடியும்.

இப்படி இச்சீட்டிழுப்பு மூலம் தெரிவானவர்களுக்கு 2004 மே - ஜூலை மாதங்களில் அதுபற்றிய அறிவித்தல்களும் விஸா விண்ணப்பப் பத்திரங்கள் போன்றவைகளும் அனுப்பிவைப்பார்கள். நேர்முகத் தேர்வு மூலம் தெரிவானவர்களுக்கு DV-2005இற்கான விஸாக்கள் ஒக்ரோபர் 1,2004 முதல் செப்ரெம்பர் 30,2005 வரை வழங்குவார்கள்.

இப்போது நடைமுறைக்கு வந்துள்ள கணனித் தொழில்நுட்ப இணைய முறையில் முறைகேடுகள், மோசடிகளைத் தடுக்கமுடியுமாம் சட்டவிரோத குடியேற்றத்தையும் இனங்காணமுடியும் எனவும் அந்நாடு கருதுகிறது.

**- பொ. சண்முகநாதன்.**

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

கரவெட்டி,ஒக்.8

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், தமது வித்தியாலய நிறுவுநர் நினைவு தினத்தையும் பரிசளிப்பு வைபவத்தையும் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கொண்டாடவுள்ளது.

அதிபர் கைலைசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக மாகாணக்கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சு செயலர் ஆர். தியாகலிங்கம் கலந்துகொள்கின்றார்.

நிறுவுநர் நினைவுரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆற்றுகின்றார். பரிசில்களை திருமதி ஹேமந்தராணி தியாகலிங்கம் வழங்குகின்றார். (ம-70)




கோப்பாய் நாவலர் வித்தியாலய மாணவனும் கோப்பாய் சாயி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவருமான சுமன் என்ற மாணவன் இந்து மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட கோலப் போட்டியில் யாழ். கல்வி வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றார். இவருக்கான பரிசிலை ஆசிரியர் ஆறு.திருமுருகன் வழங்குவதை படத்தில் காணலாம். (ஐ)

## வல்லுறவு வழக்கில் எதிராளிக்கு பிணை

யாழ்ப்பாணம்,ஒக்.8

பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி நவாலிப் பகுதியில் வைத்து பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்த செபஸ்ரியன் ஜெயபிரகாஸ் என்பவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான அடையாள அணி வகுப்பு நேற்று யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது குறிப்பிட்ட பெண் தன்னைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய நபரை அடையாளம் காட்டவில்லை.

இதனையடுத்து, சந்தேக நபரை ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

(எ-8-ரி)

# ல்லிபுர ஆழ்வார் ஆலய

## ழா சிறப்பு மலர்– 08.10.2003

## ஆலய வரலாறு

இலங்கை மாதாவின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு. தொல் பெருமைக்குரிய, வரலாற்றுப் புகழ்மிக்க வடமராட்சி கிழக்கில் அமைந்த ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அழகிய வெண் மணற் பரப்பில் காட்சியளிக்கின்றது. அவ்வாலயத்தைச் சுற்றி விரிந்த குடைபோல் படர்ந்து நிழல் தரும் பல்வேறு விருட்சங்கள் மாயவனைத் தரிசிக்கவரும் பக்தர்கள் நிழலில் அமர்ந்து வணங்கும் வகையில் ஆலயச்சூழல் அமைந்துள்ளது. பார்ப்பவர் மனத்திலே பக்திப்பரவசம் தோன்றச்செய்து ஓங்கி உயர்ந்து இராஜகோபுரம் புதுப்பொலிவுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறது. இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்திபெற்ற புராதன திருத்தலமாகும்.

இவ்வாலயத்தின் பழைய வரலாறு என்றும் நினைவு கூரத்தக்கது; அற்புதமானது. முன்னொரு பொழுது அலை பொங்கி எழும் வங்கக் கடலிலே - இன்று தீர்த்தோற்சவம் நடைபெறும் பகுதியிலே - அதிசய மச்சம் ஒன்று துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்து மக்களைத் திகைக்க வைத்தது. கற்கோவளத்துப் பகுதியில் வாழ்ந்த கடலோடிகள் பலரும் செய்த முயற்சிகள் எவையுமே பலிக்கவில்லை. வலைகளைக் கிழித்துக்கொண்டு மிக்க உயரத்தில் பாய்ந்தும் குதித்தும் கட்டு மரங்களை எட்டி உதைத்தும் வேடிக்கையாக விளையாடிக்கொண்டிருந்தது.

இரண்டொரு தினங்களாக நடைபெற்ற இச்செய்தி கேட்டு மக்கள் கூட்டம் திரண்டது. வராத்துப்பளையைச் சேர்ந்த லவல்லி என்னும் வல்லிநாச்சி நாகசாபம் தீர்ப்பதற்காக மிக்க பயபக்தியுடன் நெடுங்காலம் தவம் இருந்து வந்தார். அன்றிரவு பகவான் அவருக்கு கனவில் தோன்றி சில சம்பவங்களையும் சொல்லிக் குறித்த இடத் திற்கு மறுநாள் வருமாறு பணித்தார். மறுநாட் காலையில் லவல்லி அவ்விடம் வந்தார். அவர் கடற்கரையில் உட்கார்ந்து கைகளை நீட்டிய வண்ணம் பகவானின் திருநாமங்களைக்கூறி தியானித்திருந்தார். அம்மச்சம் அம்மையாரின் மடியில் குதித்ததும் அழகான குழந்தையாக மாறியது. கண்ணன் உதித்தான் என்று அடியார்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். லவல்லியின் ஆலோசனைப்படி அப்புனிதக் குழந்தையை ஒரு பல்லக்கில் வைத்து அன்பர்களும் அடியார்களும் அவ்வூர் அயலூர் பிரமுகர்களும் புடைசூழச் செடிகளுக்கும் மண் மேடுகளுக்கும் ஊடாக தூக்கி வந்தனர். நெடுந்தூரம் தூக்கி வந்தமையால் களைப்புற்ற மக்கள் மரநிழலில் பல்லக்கை வைத்துவிட்டு தாகசாந்தி செய்தபின் மீண்டும் தூக்க முயன்ற பல்லக்கை அசைக்க முடியவில்லை. குழந்தை மறைந்து விட்டது. அச்சமயம் அந்தணர் ஒருவர் தோன்றி அங்குள்ள பக்தர் ஒருவரிடம் சக்கரம் ஒன்றைக் கொடுத்து அதையே வைத்துப் பூசிக்கும்படி கூறிச்சென்றார். அவ்வழக்கப்படியே இன்றும் மூலஸ்தானத்தில் சக்கரம் வைத்தே பூசிக்கப்படுகின்றது.

ஆழ்வான் என்ற சொல்லுக்கு சூரியன் என்ற பொருள் உண்டு. வேதகாலத்திலே சூரியனோடு தொடர்புடைய தெய்வமாகவே விஷ்ணு கூறப்படுகிறார். வல்லிபுரநாதர் ஆழ்வார் எனப்பட்டமைக்கான காரணம் ஆராயப்படவேண்டும். இலங்கையின் வட பகுதியும் இந்தியாவின் சில பகுதிகளும் மிகப்பழைய காலத்திலே நாகர் என்ற இனத்தாரின் குடியிருப்புக்களை கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தின் மிகப்பழைய பெயர்களில் ஒன்று நாகத்தீவு என்பதாகும். நாகர்கள் நாகங்களைப் போற்றுவதோடு சூரியனையும் வழிபட்டனர். வல்லிபுர ஆழ்வாரின் மிகப்பழைய உரு சூரியக் கடவுளாக இருக்கலாம்.

வைணவர் சிறப்பாகக் கொண்டாடும் ஏகாதசி தோறும் வல்லிபுரக் கோயிலிலே உற்சவம் நிகழ்கிறது. ஆவணி மாதம் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்பெற்று உறியடி உற்சவத்திலே கண்ணனாக மாயவன் தோன்றுகின்றான் திருவிழாக் காலத்தில் கிருஷ்ண அவதாரத்திலே சிறப்பிடம் பெறும் வெண்ணெய் திருடல், மகாகம்சன் போர் என்பன நடித்துக் காட்டப்படுகின்றன.

நாராயணன் நடத்திய நரகாசுர சங்காரம் தீபாவளியின்போது இடம்பெறுகிறது. மார்கழி மாதம் முழுவதும் உதய நேரத்தில் விசேட பூசை நடைபெறுகின்றது. ஈழத்தில் ஞாயிற்றுக்கிழமையே வல்லிபுர ஆழ்வாருக்கு மிகச்சிறப்பான நாளாகக் கொள்ளப்படுகிறது. சூரியனுக்கு ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு சிறப்பிடம் பெறுவது ஆதியிலே சூரிய வணக்கத்தோடு இருந்த தொடர்பினால் ஏற்பட்டிருக்கக் கூடும்.

இன்று, புதுப் பொலிவுடன் சித்திரத்தேர் விடுவதற்கு தேர் முட்டி கட்டப்பட்டுள்ளது. அந்தத் தேர் முட்டியில் கீதோபதேசக்காட்சி காண்பவர்களையும் மெய்சிலிர்க்க வைக்கும் அளவுக்கு சிறப்பாக அமைந்துள்ளது. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய இராஜகோபுரம் நாற்பது அடி உயரமாக உள்ளது. தூரத்தில் வரும் அடியார்களையும் பக்தி மயப்படுத்தக்கூடியதாக உள்ளது. கண்ணனின் சகல லீலைகளையும் சிற்பாசிரியர்கள் வடித்துள்ளனர். பாமரமக்கள் முதல் படித்தவர்கள் வரை ஒவ்வொரு சிற்பமாக ஆராய்ந்து பார்த்தால் மாயவனின் மேல் பக்திப்பரவசம் எய்துவார்கள். அங்கு செல்வோர் அப்பகுதியில் உள்ள வெண்களிமண்ணால் உருவாக்கப்படும் வெண்ணிறநாமத்தையே நெற்றியில் அணிவார்கள்.

அதன் மூலம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் சென்ற பக்தர்கள் என அறியமுடிகிறது. ஆழ்வார் அடியார்கள் மெய்ம்மறந்து தமது துன்பங்களை வாய்விட்டு மாயவனிடம் சொல்லி அழுவார்கள். கோபாலா! கோவிந்தா! மாயவா! நாராயணா! கண்ணா! கிருஷ்ணா! பரந்தாமா! கேசவா! மாதவா! என்று தமது வாய்க்கு வந்தபடி தேரேறி வரும்போது கூவி அழைத்து வழிபடும் காட்சி அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கின்றது.

"கீதா தியானம் செய்கின்றவனை பாபங்களும்
மகா பயமும் தீண்டுவதில்லை,தாமரையிலை
தண்ணீரில் தோய்வுறா திருப்பது போன்று
அவன் இருக்கிறான்."

-கீதை.

"வல்லிபுரமாகிய மகா ஸ்தலம் விஷ்ணு மூர்த்திக்கு
உவப்பைக் கொடுக்கின்ற சிறந்த ஸ்தலமாகும்
அன்றியும் வைகுண்டகத்தில் அனுபவிக்கும்
முத்தியின்பத்தைக் கொடுப்பதுமாகும்"

தினமும் விஷ்ணு நாமத்தை குறைந்தது 108 தரமாவது ஜபிக்க வேண்டும். இது ஆன்மார்த்த நாம சங்கீர்த்தன வழிபாடு ஆகும்.

திரு. பாலகிருஷ்ணன் இரகுநாதன்.
*கோட்டக்கல்வி அதிகாரி. -மருதங்கேணி.*

மலரமைப்பு:
எஸ். தில்லைநாதன்
வடமராட்சி பிரதேச செய்தியாளர்




## வல்லிபுரத்தாழ்வாரே வரமருள வருக!

சங்கு சக்கர மேந்திச் சங்கடந் தீர்த்தருளும்
வல்லிபுர ஆழ்வார் தேர் வடம் பிடித்திழுக்க
பொங்கு ம் அருள் சுரந்து பொலிந்தே தோன்றிடும்
ஸ்ரீமந் நாராயணனே கேசவனே மாதவனே
எங்கு ம் இருள் அகற்றி அருளொளி வீசி நிற்கும்
கோபால கிருஷ்ணனே கோகுலனே மாயவனே
இங்கு வந்தெமது இடுக்கண் களைந்திடவே
ஏழுமலையானே தங்கரதமேறி வருக!

கண்ணனே கார்முகில் வண்ணனே வருக
கடும்பசி போக்கிடும் மாமன்னனே வருக
எண்ணமெலாம் ஈடேறத் தேவிமார் புடைசூழ
வண்ணத் தேரேறி வரும் மாயவனே வருக
வெண்ணெயுண்ட வாயானே வேங்கடவா வருக
வல்லிபுரத்தாழ்வாரே வரமருள வருக
மண்ணில் நல்ல வண்ணம் மாண்புடனே நாம்வாழ
வேலவனின் மாமனே வெள்ளிரதமேறி வருக!

-கவிமணி இராசையா ஸ்ரீதரன்.

## அருளாசியுரை

<u>ஸ்ரீமத் பகவத்கீதை.சுலோ -61</u>

ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜீன திஷ்டதி!
ப்ராமயன் ஸர்வ பூதானி யந்த்ரா ரூடானி மாயயா!!!

<u>பொருள்</u>

அர்ஜீனா! ஈஸ்வரன் உயிர்களையெல்லாம் உடல் என்னும் யந்த்ரத்திலேற்றி மாயையினால் ஆட்டிக்கொண்டு அவைகளின் உள்ளத்திலிருக்கிறான்.

பரந்தாமன், வல்லிபுரமாயவன் மெய்யடியார்களே!

வல்லிபுரச்சக்கர ரூப மாயவனின் வருடாந்த மஹோற்சவம் கடந்த புரட் டீ 7ஆம் திகதி (24-09-03) புதன்கிழமை அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மஹோற்சவத்தின் பிரதான அங்கமாகிய சங்காரக உற்சவம் எனப்படும் மிகவும் சிறப்புவாய்ந்த இர தோற்சவம் இன்று நடைபெறுகின்றது. எல்லாம் வல்ல எம்பெருமான் தேரேறி வீதி வலம் வந்து கொடிய ஆணவ மலத்தை அழித்து அருளுவார். நாளைய தினம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாயவனின் வரலாற்றுடன் தொடர்புடைய கடலாடல் தீர்த்தமாகும். கற்கோவளம் (வங்கக்கடலின் வடகீழ்த்திசையில்) கடற்கரையில் ஆஞ்சநேயருடன் பகவான் கடல் தீர்த்தமாடி அருளுவார். நாளை மறுதினம் மஹோற்சவத்தின் அருளல் நிலையைக் குறிக்கும் பட்டுத்தீர்த்தமாகும். இம்மூன்று தினங்களிலும் பகவானைத்துதிக்கும் அடியவர்களுக்கு பகவான் பலகோடி நன்மை களை அளிப்பார் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனது அருளாசிகளைக் கூறிக்கொள்வதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்ரீ ஆழ்வார் பீடம்.
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.
துன்னாலை வடக்கு.
புலோலி.

பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக்குருக்கள் J.P.,
பிரம்மஸ்ரீ.ச.க.புருஷோத்தமக்குருக்கள்.
பிரதான குருமார்கள்


## இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்...... (C/30558)

**அருள்நாயகி கிறீம் ஹவுஸ்**
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
ஐஸ்புறூட். ஐஸ்கிறீம். ஐஸ்சொக்.
ஐஸ்பழம் மற்றும் காலை, மாலை
சிற்றுண்டி வகைகளுக்கும்.
(ஓடர்களுக்கும் வழங்கப்படும்)

**அருள் நாயகி புத்தகசாலை & பன்ஸி ஹவுஸ்**
அழகுசாதனப் பொருள்கள்
செய்திப் பத்திரிகைகளுக்கு
மகாவித்தியாலய வீதி,
நெல்லியடி.

**ஜமுனா ஸ்ரோஸ்**
தம்ரோ
தளபாட ஏக விநியோகஸ்தர்கள்.
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
ருசிமிக்க குளிர்பானங்கள். ஐஸ் சொக்.
ஐஸ்கிறீம். ஐஸ்பழம் மற்றும்
சிற்றுண்டி கட்கு
இல. 119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாரதீ எலெக்ரிக்கல் வெல்டிங் ஸ்பொட்**
நவீன டிசைன்களில் கேற், கிறில், மணப்பந்தல் தயாரிப்புகட்கும் வாகன ஒட்டு வேலைகட்கும் வடமராட்சியில்
கிராமக் கோட்டு சந்தி,
புலோலி.

**சிலம்ஸ் புடைவையகம்**
அனைத்து புடைவை தெரிவுகளுக்கும்
ஏற்ற ஸ்தாபனம்.
பிரதான வீதி,
நெல்லியடி.

**துளசி வீடியோ ஓடியோ சென்ரர்**
பழைய, புதிய திரைப்பட பாடல்களை
ஸ்ரீரியோ முறையில் ஒலிப்பதிவு செய்யவும்
CDயில் பாடல் பதிவுகட்கும் பழைய, புதிய
திரைப்பட நாடாக்களுக்கும்
நாடவேண்டிய இடம் :
சாவகச்சேரி வீதி.
சந்தையடி மந்திகை.

பல்லுயிர்கட்கும் நல்லருளை நல்கும்
வல்லிபுரத்தான் அடி பரவுவோம்.
**பல்பொருள் வாணிபம் முதலாக**
★வங்கிச் சேவை ★வாடகை சேவை
★ஒப்பந்த சேவை ★சமூக மேம்பாடு
★புலமையாளர் ஊக்குவிப்பு
இன்னும் பல சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும்
**கட்டை வேலி நெல்லியடி பல.நோ.கூ.சங்கம்**
கரவெட்டி.

**கோபாலா சர்வதேச தொலைத்தொடர்பு சேவை**
பக்ஸ் வசதி. போட்டோ கொப்பி. லெமினேற் மற்றும்
தங்குமிட வசதிகளுமுண்டு.
மந்திகை, புலோலி.
உள்நூர்:070-212858, 070-212872, 070-212191, 021-2263277
வெளிநாடு: 0094-70-212858, 0094-70-212872,0094-70-212693,
0094-21-2263277, 2263633

வெய்யில் கொடுமை வாட்டுகிறதா? அல்லது
நண்பர்களை நண்பிகளை மகிழ்விக்க
ஆசைப்படுகிறீர்களா? அல்லது
மங்களகரமான நிகழ்வை மகிழ்விக்க முடியவில்லை என்று
கவலைப்படுகிறீர்களா?
வடமராட்சியில் இதற்கு விடைகாண விரையுங்கள்
**யோகாஸ் கிறீம் ஹவுஸ்**
**YOGAS CREAM HOUSE**
கந்த முருகேசனார் சிலையடி,
மந்திகை. பருத்தித்துறை.
NEAR
KANTHAMURUGESANAR
STATUE-MANTHIGAI

வடமராட்சி வடக்கு
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசத்தின்
**வலை உபகரண விற்பனவு நிலையம்**
**ஐஸ் உற்பத்தி விற்பனவு நிலையம்**
சகல மீன்பிடி உபகரணங்களுக்கும் ஐஸ்
உற்பத்திகளுக்கும் உரிய நிறுவனம்.
பஸ் நிலைய கிழக்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

**ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பு நிலையம்**
சகலவித உள்நாட்டு. வெளிநாட்டு
தொடர்புகளுக்கும்
தம்பசிட்டி வீதி, 021 226 3062
0777-732294 காந்தியூர், புலோலி.

முதியோர் தினத்தன்று தெல்லிப்பழை, உடுவிலிலிருந்து

# உயர் பாதுகாப்பு வலய ஆலயங்களில் நாற்பது முதியவர்கள் சென்று வழிபாடு

தெல்லிப்பழை,ஒக்.8

தெல்லிப்பழை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் கடந்த 4ஆம் திகதி கொண்டாடப்பட்ட முதியோர் தினத்தின் போது இப்பகுதிகளைச் சேர்ந்த 40 முதியவர்கள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ள மாவிட்டபுரம், கீரிமலை ஆலயங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

40 முதியவர்களும் அவர்களது வீடுகளிலிருந்து பஸ் மூலம் உயர் பாதுகாப்பு வலய பகுதியிலுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு விசேட பூசைகள் நடத்தப்பட்ட பின்னர் அங்கிருந்து கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு கீரிமலைத் தீர்த்தத்தில் அவர்கள் நீராடிய பின் அங்கும் பூஜை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. பின்பு அவர்கள் வெள்ளாங்குளம் பகுதிக்குச் சென்று அங்குள்ள பௌத்த ஆலயத்திலும் வெள்ளாங்குளம் லூர்து மாதா ஆலயத்திலும் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மீண்டும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அழைத்துவரப்பட்டு அங்கு தெல்லிப்பழை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரட்ணம் தலைமையில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இச்செயற்பாடுகளுக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை குறைந்த கட்டணத்தில் பஸ் சேவையை நடத்தி அனுசரணை புரிந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ம-150)

பழுதடைந்த மீனை விற்காதீர்கள் என

# எச்சரிக்கை செய்த காரணத்தால் சுகாதார பரிசோதகருக்கு மிரட்டல்

வலிகாமம் தெற்கு,ஒக்.8

பழுதடைந்த மீன்களை விற்பனை செய்வதற்குத் தடைவிதித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் மீன் வியாபாரிகளால் மிரட்டப்பட்டார்.

சுன்னாகம் மீன் சந்தையில் மயிலிட்டியைச் சேர்ந்த சில மீன் விற்பனையாளர்கள் பழுதடைந்த மீனை விற்பதற்கு சுன்னாகம் நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தடைவிதித்துள்ளார்.

சுகாதாரப் பரிசோதகரின் இச் செயலால் ஆத்திரமடைந்த மீன் வியாபாரிகள் அவரது காரியாலயம் வரை வந்து பரிசோதகரை கண்டபடி ஏசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

"பழுதடைந்த மீனை வேண்டுமென்றால் யாரும் வாங்காது விடலாம். ஆனால், அதனை விற்பனை செய்வதை யாரும் தடுத்துவிட முடியாது" என மீன் வியாபாரிகள் வாதாடியுள்ளனர்.

பழுதடைந்த எந்தப் பொருளையும் விற்பனைக்கு கொண்டு வருதல் உணவுக் கட்டுப்பாட்டு சட்டப்படி குற்றமாகும். பழுதடைந்த பொருள் விற்பனை செய்யப்படுவதை எவ்விடத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் தடை செய்யும் அதிகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உண்டு என்பதை மீன் வியாபாரிகளுக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்களால் விளக்கி கூறப்பட்டதை தொடர்ந்து மீன் வியாபாரிகள் திரும்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ம-152)

மீள்குடியமர்வுக்கு வசதியாக

# தட்டுவன்கொட்டிப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணி

கிளிநொச்சி,ஒக்.8

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டிப் பகுதியில் மீள்குடியமர்வுக்கு வசதியாக அப்பிரதேசத்தில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றும் பணியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணியின் போது மிதிவெடிகள் மற்றும் வெடிக்கும் நிலையிலுள்ள வெடிபொருள்கள் அகற்றப்பட்டு கட்டம் கட்டமாக அவை அழிக்கப்பட்டும் வருகின்றன.

எறிகணைகள் 11, கைக்குண்டுகள் 38, ஆர்.பி.ஜி. எறிகணைகள் 155, மிதிவெடி 10, வெடிமருந்துக் கலன்கள் 3, ரவைகள் ஆயிரம், பரா எறிகணைகள் 17 என்பன இதுவரை தகர்த்து அழிக்கப்பட்டுள்ளன.

(ம-9)

# வவுனியா ஆஸ்பத்திரியில் பிளாஸ்ரிக் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஒக்.8

வவுனியா பொது வைத்திய சாலையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த விசேட மருத்துவ நிபுணர் டாக்டர் சார்ஸ் ஹீவா தலைமையிலான வைத்தியர்கள் குழு இதனை மேற்கொள்ளவுள்ளது.

இக்குழுவில் ஜேர்மன், பிரிட்டன், மலேஷியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர்.

12 நாள்கள் நடைபெறவுள்ள இந்த இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையினால் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பயன்பெறவுள்ளனர்.

(ஜ-10)

# யாழ். பிரதேச செயலர் பிரிவில் 1,600 குடும்பங்களுக்கு ரூ.25,000

## விரைவில் வழங்கப்படும் என்கிறார் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு விரைவில் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாறு யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-9 பாதை திறந்த பின்னர் யாழ். பிரதேச செயலர் பிரிவில் உள்ள பகுதிகளில் 2ஆயிரத்து 500 குடும்பங்கள் வரையில் மீளக்குடியமர்ந்துள்ளன.

இவற்றில் 850 குடும்பங்கள் இதுவரையில் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுள்ளன.

மிகவிரைவில் குருநகர், பாசையூர், நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு 25ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரச அதிபரும் இக்கொடுப்பனவுகளுக்கான நிதியை விரைவில் வழங்குவதாக உறுதியளித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (ம-12)

# விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்புரிமையை புனரமைக்கலாம்

வரணி,ஒக்.8

விவசாய கமத்தொழில் ஓய்வூதியத் திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு பிரதிலாபத்திட்டம் ஆகியவற்றுக்குரிய சந்தாப் பணத்தைக் கட்டத் தவறியமையால் தமது உறுப்புரிமையை இழந்தவர்கள் அவற்றை புதுப்பித்துக் கொள்வதற்கு கமத்தொழில் விவசாயக் காப்புறுதிச்சபை சந்தர்ப்பமொன்றை வழங்கியுள்ளது.

இவ்வாறு உறுப்புரிமையை இழந்தவர்கள் தத்தமது பிரதேச கமத்தொழில் சேவைகள் நிலையத்திலோ அல்லது மாவட்ட விவசாய காப்புறுதித் திணைக்களத்திலோ உடனடியாகத் தமது நிலுவைப் பணம் முழுவதையும் ஒரே தடவையில் செலுத்தி மீண்டும் தமது உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கமத்தொழில் விவசாய காப்புறுதிச்சபைத் தலைவர் எஸ்.ஆர்.பி.திலகநாயக்க அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்தச் சலுகையானது 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் இது கடற்றொழில் ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளுக்கும் பொருந்துமாகையால் அவர்கள் மாவட்ட கடற்றொழில் உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(ம-10-170-6)

# ஈழத்துச் சித்தர் கடையிற்சுவாமிகள்

கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்கு விளக்கம் சொல்லத் தேவையில்லை. அவர்கள் தாமாகவே இறையனுபவத்துக்கு உள்ளாகி விடுவார்கள். கடவுள் ஒருவர் இருக்கின்றார்; அவர் நம்மை வழி நடத்துகின்றார் என்பதை உணர்ந்த சித்தர்கள் மக்களிடையே மதிப்புப் பெற்று அவர்களுக்கு அருளாசியை வழங்குகின்றார்கள். சமூகக் குறைபாடுகளைப் போக்கி மக்களை நல்வழிப் படுத்துகின்ற ஞானிகளாகவும் விளங்குகின்றார்கள்.

இன்று கடையிற்சுவாமிகள் குருபூசை தினமாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. நீராவியடி கடையிற்சுவாமிகள் சமாதிக் கோயிலில் குருபூசை இடம்பெறும்.



ஈழத்துச் சித்தர்கள் வரிசையிலே யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த கடையிற்சுவாமிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். அவர் சைவ மக்களின் வணக்கத்துக்குரியவராகவும் சித்தத்தைச் சிவன்பால் வைத்து பரம்பொருளின் பேரருட் கருணைக்குப் பாத்திரமாகி தெய்வாம்சம் பொருந்தியவராகவும் விளங்கியவராவார்.

### வாழ்வில் ஒரு திருப்பம்

இவர் அறிவாற்றல், ஒழுக்கம், அன்புமிக்கவராகத் திகழ்ந்தார். இவருடைய முகத்திலே எந்நேரமும் ஒரு தேஜஸ் இருக்கும். தெய்வீகத் தோற்றம்மிக்க இவர், இந்தியாவிலே கன்னட தேசத்திலே ஒரு நீதிபதியாகக் கடமையாற்றினார். இவருடைய வாழ்வில் ஒரு திருப்பத்தையேற்படுத்தியது இந்த நீதிபதித் தொழில். நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியாக ஒருவன் இருக்கின்றான். அவன்தான் இறைவன். நான் நீதிவானாக இருந்தாலும் எனக்கு மேல் இருக்கின்ற நீதிபதியே உண்மையான தீர்ப்பை வழங்கவல்லவனாக விளங்குகின்றான் என்று வாழ்ந்தவர் சுவாமிகள்.

சிவஸ்ரீ நறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

இத்தகைய கருத்துடன் வாழ்ந்து வரும் நாளில் இவர் விசாரணை செய்த குற்றவாளி ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். அவ்வேளை அவர் சிந்தித்தார். ஒருவரின் உயிரைப் பறிப்பதற்கு உத்தரவிட நான் யார்? எனக்கு என்ன அருகதை இருக்கிறது? இறைவனது படைப்பை அழிப்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது? இவ்வாறு எண்ணமிட்ட இவர், நீதிபதித் தொழில் யாவற்றையும் துறந்து சந்நியாசியாகப் புறப்பட்டுவிட்டார். அன்று முதல் சித்தர் போன்று அட்டமா சித்திகளும் கைவரப்பெற்று சித்தத்தைச் சிவன்பால் வைத்து சிவனடியாராக மாறினார்.

### முத்தியானந்தரானார்

தம்மை வழிநடத்துவதற்கு ஒரு குருநாதரை நாடினார். மைசூர் சிருங்கேரி மட சங்கராச்சாரிய பீடத்தின் 32ஆவது தலைவராகவிருந்த ஸ்ரீ நரசிம்மபாரதியைக் குருவாகக் கொண்டார். இவர் ஆறாதாரங்களையும் அடக்கி மனத்தை ஒருவழிப்படுத்தி ஞானதீட்சை பெற்று 'முத்தியானந்தர்' என்னும் தீட்சாநாமஞ் சூட்டப்பட்டார்.

தனது ஞானத்தை நிஷ்டையூடாக

## சித்தத்தை சிவன்பால் வைத்த உத்தமசீலர்

இறைவனிடம் செலுத்திய சுவாமிகள், பற்றற்ற நிலையிலே ஞானியாக வாழ்ந்தார். இவர் உலகபந்தத்தை விடுத்து இறைவனது ஞானநிலையையெய்தி சித்தர் வரிசையிலே சிறப்பான இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

### அதிசயம் நடந்தது

இப்படியிருக்கும் நாளிலே யாழ்ப்பாணத்திலே பெரியகடையிலே வணிகஞ் செய்த வைரமுத்துச் செட்டியார் என்பவர் இந்தியாவுக்குச் சென்ற வேளையிலே இவரது மகிமையைக் கேள்வியுற்று அவரது திருவடிகளைப் பணிந்து, "யாழ்ப்பாணத்துக்கு வரும்படி" அன்பாக வேண்டினார்.

பின்னர் சிலநாள் கழிய செட்டியார் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டார். ஒரு வெள்ளிக்கிழமை நல்லைக் கந்தனை வணங்கி விட்டுக் கடும்பசியுடன் வீடு திரும்பினார்.

இதற்கிடையே இவரது இல்லத்தில் ஓர் அதிசயம் நடந்தது. மத்தியானவேளை ஒரு சந்நியாசியார் வந்தார். அப்போது செட்டியார் வீட்டில் சமையல் பூர்த்தியாகியிருந்தது. வந்த சந்நியாசியார் தமக்கு உணவு பரிமாறப்பட்ட போது தம்பக்கத்திலே இன்னுமோர் இலையில் உணவு படைக்குமாறு பணித்தார். அவ்வாறே பரிமாறப்பட்டது. பசிக்களையுடன் வீட்டுக்கு வந்த செட்டியார் அங்கே இலையின் முன்னே அமர்ந்திருந்த சுவாமிகளைக் கண்டார். உடனே ஆனந்தக் கண்ணீர் வடிய "சுவாமிகளே! எப்போது வந்தீர்கள்?" என்று அன்பொழுகக் கேட்டார்.

'நீ வரச் சொன்னாய், நான் வந்துவிட்டேன்' என்று சொல்லி பக்கத்து இலையில் இருந்த உணவை அவரை உண்ணுமாறு பணித்தார். அப்போது முதலாக சுவாமிகள் பெரியகடைச் சதுக்கத்தைத் தமது உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்தார். அதனால் இவர் 'கடையிற்சுவாமிகள்' என அழைக்கப்பட்டார். இவரது முகத்தில் எப்போதும் ஆனந்தம் குடி கொண்டிருக்கும். இவரது புன்சிரிப்பே மக்கள் பலரை ஈர்த்துவிட்டது.

### சுவாமியின் மகிமை

ஒருமுறை சுவாமிகளுக்கு அறிமுகமான ஒரு மீனவன் கடலுக்குச் சென்ற போது கடற்கொந்தளிப்பில் அகப்பட்டுக் கொண்டான். வகையறியாமல் திண்டாடியபோது சுவாமிகளை நினைந்தான். அப்போது கரையில் நின்ற கடையிற்சுவாமிகள் மீனவனின் மனைவியையும் அழைத்துக் கொண்டு கடற்கரையில் நின்ற ஒரு தென்னைமரத்தில் கயிறு ஒன்றைக் கட்டி இழுத்தார். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

கரைசேர்ந்த மீனவன் "நான் சுவாமிகளை நினைத்தேன். என்னுடைய படகு யாரோ கயிறுபோட்டு இழுப்பது போன்று தானாகவே கரை சேர்ந்தது" எனக் கூறினான். அப்போதுதான் சுவாமியின் மகிமையை உணர்ந்தனர்.

முப்பது வருட காலமாக யாழ்ப்பாணத்தில் வசித்த கடையிற்சுவாமிகள் ஒரு குருசீட பரம்பரையைத் தோற்றுவித்தார்.

### சற்குருவைக் கண்டார்

இவருடைய உத்தமசீடர் நல்லூர் தேரடியில் நிஷ்டை கூடியிருந்த செல்லப்பா சுவாமிகளாவார். இவர் நல்லூர் கோயில் வீதியிலே கடையிற்சுவாமியைச் சந்தித்தபோது தனது சற்குருவைக் கண்டுகொண்டதனை உணர்ந்தார். செல்லப்பா கொடுத்த எலுமிச்சம்பழம் ஒன்றையும் கடையிற்சுவாமிகள் ஏற்றருளினார்.

ஒருநாள் கடையிற்சுவாமிகளைக் காண பெரியகடைக்குச் சென்றபோது தன் சீடராகச் செல்லப்பாவை ஏற்றுக் கொண்டு அதற்கு அடையாளமாக ஒரு ரூபா நாணயம் ஒன்றைக் கொடுத்து பின்னர் தலையின் மேல் ஒரு குடையினை அசைத்து, "ஓடடா!" என்று சொல்லிவிட்டார். அதிலிருந்து சுயநினைவிழந்த செல்லப்பா 15 நாள்கள்வரை பரமானந்த நிலையிலிருந்தார்.

இவரது பரம்பரையிலே வந்தவர்கள்தான் ஈழத்துச் சித்தர்கள் எனப் போற்றப்பட்டனர். குழந்தைவேற் சுவாமி என்பவர் கடையிற்சுவாமி மீது பாடல்கள் பாடியுள்ளார்.

தமது இறுதிக் காலத்தை நீராவியடியிற் கழித்த கடையிற்சுவாமிகள் 1891ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்திலே சமாதி நிலையெய்தினார்.

ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டியாக விளங்கிய சுவாமிகளை நினைந்து நாமும் நற்கதி அடைவோமாக.

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்!

கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். யாழ். பீச்றோட், நாவாந்துறையைச் சேர்ந்த அன்ரன் வலன்ரைன் (வயது 5) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

கடந்த சனியன்று சிறுவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோது கிணற்றில் தவறிவீழ்ந்ததாகவும் - சிறுவனைக் காணவில்லை என்று தேடியபோது கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சிறுவனின் சடலம், மரண விசாரணையின் பின்பு நேற்றுமுன்தினம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.(ஒ-ரி)

## இந்திய மீனவர் இருவருக்கு விளக்கமறியல்

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பத்து இந்திய மீனவர்களில் படகோட்டிகளான இருவரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டிருக்கிறது.

மீனவர்களான எஞ்சிய எட்டுப் பேரையும் கொழும்பு மிரிகனையில் உள்ள குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் தடுப்பு முகாமுக்கு அனுப்பி அங்கிருந்து அவர்களை தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

(ம-9)

# ஏழாலை ஸ்ரீமுருகன் பாடசாலையில் குறைபாடுகளால் கற்றல் பாதிப்பு

வலி.தெற்கு,ஒக்.8

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் காரணமாக மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகப் பெற்றோர்கள் சார்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைக் கட்டடங்கள் நீண்டகாலம் புனரமைக்கப்படாமல் உள்ளன. வகுப்பறைக் கட்டடங்கள் நெருக்கமாகக் காணப்படுவதுடன் போதிய தளபாடங்கள் இல்லாமையால் மாணவர்கள் வகுப்பறைகளில் நெருக்கமாக அமர்ந்திருந்தே கல்வி கற்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

பொதுமக்கள் பாடசாலை நேரங்களிலும்கூட பாடசாலை வளவினூடாக போக்குவரத்தை மேற்கொள்வதால் கல்வி கற்கும் மாணவர்களின் கவனம் திசைதிருப்பப்படுவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்கள் சங்கம் கல்வித் திணைக்களத்தின் உதவியைப் பெற்று அதனுடன் இணைந்து செயற்பட்டு இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ம-152)


*இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற சனசமூக நிலைய*

*கட்டட நிதிக்காக நடத்தப்பெற்ற*

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

முதலாம் பரிசு இல. 695

இரண்டாம் பரிசு இல. 2597

மூன்றாம் பரிசு இல. 697

ஐந்து ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:

765, 542, 703, 1422, 698

பரிசில்கள் யாவும் 11.10.2003 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

*இருபாலை கிழக்கு, கோப்பாய்.* (23426) - நிர்வாகத்தினர். (24-11-15)



தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (TITA) நிர்வாகத்தில்

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்

**இலவச கணனிப் பயிற்சி நிலையம்**

- யாழ்ப்பாணம் -

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியம், தமிழ்ப் பிரதேசங்களில் வசதி குறைந்த மாணவர்களும் கணனிக் கல்வியைப் பெறத்தக்கதாக மாணவர்களிடமிருந்து எந்த வகையிலும் நிதி அறவிடப்படாதவகையில் இலவசமாகப் போதிப்பதற்கென கணனிப் பயிற்சி நிலையமொன்றினை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் பயில விரும்பும் வசதி குறைந்த மாணவர்கள் எவரும் பயிற்சிக்காக விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பிக்கும் மாணவர் இலவசமாகப் பயில்வதற்கு உரித்துடைய ஒருவர் என்பதனை உரியமுறையில் சிபார்சு செய்யப்படவேண்டும்.

கற்கை நெறிகளின் விவரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*64, கில்னர் ஒழுங்கை,*

*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்* - முகாமையாளர்.

**திறப்பு விழா அழைப்பு**

காலம் : நாளை (09.10.2003) வியாழக்கிழமை காலை 10 மணி

இடம் : 64, கில்னர் லேன், யாழ்ப்பாணம்

தலைமை : திரு. அ.பஞ்சலிங்கம் (*இளைப்பாறிய அதிபர் – யாழ். இந்துக்கல்லூரி*)

பிரதம விருந்தினர்

திரு. ப. விக்னேஸ்வரன் (*கல்விப் பணிப்பாளர் – யாழ். வலயம்*)

சிறப்புவிருந்தினர்கள்:

திரு. சி. இளம்பரிதி (பொறுப்பாளர் அரசியற்றுறை யாழ். மாவட்டம்)

கலாநிதி எஸ். மகேசன் (கணனி விஞ்ஞான துறைத் தலைவர் யாழ். பல்கலைக்கழகம்)

திரு. வீ. கிருஷ்ணகுமார் (கணனிப்பிரிவு - யாழ். இந்துக் கல்லூரி)

பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

திரு. ந. கண்ணன் (இணைப்பாளர் - சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)

திரு. எஸ். எழிலன்பன் (பொறுப்பாளர் - மாணவர் அமைப்பு யாழ். மாவட்டம்)

(C/30582)

(24-11-15) அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நம்பிக்கை நிதியம் (SKTATT)

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (TITA).



**கெமரா பழுது பார்த்தல்**

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக, அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை. ஒரு வருட உத்தரவாதம்!



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ்சேர்கியுற், ஃபிளாஸ் கன்ஸ்

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 2575430, 2565756

P.G. மாட்டினுக்கு எதிரிலும் நேஷனல் ஷோரூம் மற்றும் ஹோட்டல் ரேணுகா மத்தியிலும் (கடல் பக்கம்)


## மினிபஸ்களில் தவறவிட்ட பொருள்களைப் பெறலாம்

வடமராட்சி,ஒக்.8

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினால் நடத்தப்படும் பருத்தித்துறை - யாழ்ப்பாணம், பருத்தித்துறை - மானிப்பாய், நவாலி மினிபஸ் சேவைகளில் பயணஞ்செய்த பயணிகளால் கைவிடப்பட்ட ஒரு தொகுதி பொருள்களை உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தங்கப்பவுண், உடுபுடைவை பொதி, பனை உற்பத்தி கைப்பணிப் பொருள்கள் உட்படப் பல பொருள்கள் மினிபஸ் வண்டிகளுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் உள்ள சங்க அலுவலகத்தில் பொருள்களை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ம-173)

## மடகஸ்கர் விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு!

காவத்தை,ஒக்.8

மடகஸ்கரில் இடம்பெற்ற விபத்தொன்றில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பலியானார். மேலும் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தோரில் மூவர் முஸ்லிம்கள்; மற்றவர் சிங்களவராவார்.

மாணிக்கக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இவர்கள் பயணம் செய்த வான் கொள்கலனுடன் மோதி விபத்துக்குள்ளானது. எச்.எம்.ஹுசைன் (38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். இவர் களுத்துறைப் பகுதியைச் சேர்ந்தவராவார்.

காயமடைந்தவர்களான ஹசான், பசால், அப்போ, ஹுசைன் ஆகியோர் காவத்தை பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அன்னதான மண்டபம் திறந்து வைப்பு

வடமராட்சி,ஒக்.8

இரண்டாவது உலக இந்துமகாநாட்டையொட்டி இந்து கலாசார அமைச்சின் நிதிமூலம் வல்லிபுரக் கோயிலில் கட்டி முடிக்கப்பட்ட பெரியாழ்வார் அன்னதான மண்டபம் இந்து கலாசார அமைச்சினால் திறந்து வைக்கப்பட்டது.

அறங்காவலர்சபைத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை அதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வல்லிபுரக் கோயில் அறங்காவலர் சபையினால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அமைச்சர் மகேஸ்வரன் பரிசில்களை வழங்கினார். (ம-173)

## நாடகவிழா

யாழ். கல்வி வலயங்களுக்கிடையிலான சிறுவர் நாடக விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலயங்களுக்கிடையில் நடந்த சிறுவர் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பாடசாலை அணிகள் இந்த நாடக விழாவில் பங்குபற்றவுள்ளன.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் கே.தியாகலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நாடக விழாவில் வெற்றிபெறும் அணிகளுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. (ம-3)


**தவறிவிட்டது**

திருஞானம் தர்மலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (823384686V), விசேட அடையாள அட்டை (0907004653), பாடசாலை அடையாள அட்டை (1153), பல்கலைக்கழக அடையாள அட்டை (2003/A/SPI/341) என்பன கந்தர்மடம் பிச்சிற்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "சிவஸ்தான்" ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (23419)


# வாக்காளர் பட்டியல்களினை கணனி மயப்படுத்த ஆலோசனை

கொழும்பு,ஒக்.8

வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கு கணனியைப் பயன்படுத்தும் திட்டம் தொடர்பாக, தேர்தல் நடைமுறைத் திருத்தம் பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வாக்காளரொருவர் இரு இடங்களில் உள்ள வாக்காளர் பட்டியல்களில் தமது பெயரைப் பதிவுசெய்வதால் இடம்பெறக் கூடிய தேர்தல் மோசடியை ஒழிப்பது -

ஒவ்வொரு வருடமும் வாக்காளர் பட்டியலைச் சரிபார்க்கும் நடைமுறையால் ஏற்படும் அதிகரித்த செலவினத்தைக் கட்டுப்படுத்துவது -

தொடர்பான ஆலோசனைகள் தெரிவுக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன்படி, 18 வயதைப் பூர்த்தி செய்யும் சகல பிரஜைகளுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கும் வேளை அவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும். அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குரிய தேர்தல் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் பதிவுசெய்யப்படும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு இந்த ஆலோசனைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மற்றும் ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆகியோரின் கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளது. (ம)


**Universal Education Centre**
**Under the purview of Ministry of Hindu Affairs**

**Sri Pathmanathan Bungalow**
**off Point Pedro Road,**
**Manthikai.**
**Office T.P.: 2263860**

யுனிவேர்சல் கல்வி நிலையத்தின் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். விண்ணப்பப்படிவங்களை மேற்படி முகவரியிலும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**Certificate Courses**

| Course | Duration | Fees |
|---|---|---|
| Ms Word | 3 Months | 950/= |
| Ms Excel | 3 Months | 950/= |
| Ms Access | 3 Months | 950/= |
| Page Maker | 3 Months | 950/= |
| Coral Draw | 3 Months | 950/= |
| Flash | 3 Months | 950/= |
| Auto CAD | 3 Months | 950/= |
| Photo Shop | 3 Months | 950/= |
| C/c++ | 4 Months | 1700/= |
| Visual Basic | 4 Months | 1700/= |
| Java | 4 Months | 1700/= |
| HTML & Java Script | 4 Months | 1700/= |

**Diploma Courses**

| Course | Duration | Fees |
|---|---|---|
| Diploma in Micro Soft Office | 4 | 2000/= |
| Diploma in Desktop Publishing | 4 | 2000/= |
| Diploma in Internet Technology | 4 | 2000/= |
| Diploma in English (Specially for A/L Students) | 6 | 1200/= |

புதிய பயிற்சி நெறிகள் யாவும் 15.10.2003 அன்று ஆரம்பமாகும்.

(C/30585) (26-24-11-15) - நிர்வாகி.



**தேவை**

- விற்பனையாளர்
- ஸ்ரோர் பாதுகாவலர்
- பில் கிளார்க்

தமிழ், ஆங்கில, சிங்களப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், இரும்புப் பொருள்கள் ஆகிய வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவுசெய்யப்பட்டால் இரண்டு நற்சான்றிதழ்கள் தரப்பட வேண்டும். நேரடியாக வரவும்.

நிர்வாகி,

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/30583) (26-24-11-15)



**இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்**



யாழ். புண்ணிய பூமிக்கு வருகை

ஸ்ரீசோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற

ஸ்ரீவெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்

**மணிசாமி சாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும், திருமணத் தடங்கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித்தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியமில்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள். உண்மை புரியும்.

மணிசாமி சாமி

(23371)

54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,

பழைய லிங்கம் கூல்பார் அருகில், உல்லாசப்பயணிகள் விடுதி, யாழ்ப்பாணம்.



**கண்ணீர் அஞ்சலி**

04.10.2003 இல் சென்னையில் காலமான

**திருமதி இராசம்மா ஆனந்தர்** (முதுசவர்ணம்)

*(இணுவில் மத்திய கல்லூரி, ஆரம்பப் பிரிவு - அதிபர் இணுவில் அ.மி.த.க. பாடசாலை)*

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இணுவில்.*

செ.சோதிப்பெருமாள் (இளைப்பாறிய அதிபரும், சமாதான நீதிவானும்), இளைப்பாறிய ஆசிரியர்களும்.

(23397) (24-11-14)

# பேச்சுக்களில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு தராவிட்டால் அலரி மாளிகையை முற்றுகை!

## லட்சக் கணக்கானோர் ஒன்று கூடுவர் என ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை

ஏறாவூர்,ஒக்.8

அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதற்கு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் இலட்சக்கணக்கான முஸ்லிம்களை தலைநகரில் ஒன்று திரட்டி அலரி மாளிகையை முற்றுகையிடுவதற்கான முயற்சிகளை வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும்.

அரசிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும்வரை காலவரையறையற்ற முறையில் இந்த முற்றுகைப் போராட்டத்தைத் தொடர்வோம்.

- இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஏறாவூர் அந்நஜாத் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏறாவூர் புன்னக்குடா வீதியில் நடைபெற்ற மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஞாபகார்த்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிக்குமாறு கூறுவதோ, நிரந்தரமாக இணைக்குமாறு தெரிவிப்பதோ முஸ்லிம்களின் கோரிக்கை அல்ல. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கான தனி மாகாணம் என்பதே முஸ்லிம்களின் கோரிக்கையாகும். வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிக்குமாறு கோருவது மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு கூறுவதற்கு ஒப்பானது.

முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் நிறுவனமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தனியான முஸ்லிம் மாகாணத்தை வென்றெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிக்குமாறே கோரிக்கை விடுக்கப்பட்டது.

தற்போது வடக்கு - கிழக்கைப் பிரிக்குமாறு கூறித்திரியும் அமைச்சர் அதாவுல்லாகூட தனி மாகாணத்தை வென்றெடுப்பதற்காகத் தனக்கு வாக்களிக்குமாறு கூறியே தனது தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வெற்றிபெற்றார்.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாணம் பிரியவேண்டும் என்பதோ அல்லது நிரந்தரமாக இணைய வேண்டும் என்பதோ முஸ்லிம்களின் பிரச்சினை அல்ல. வடக்கு மாகாணத்திலோ அல்லது இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திலோ முஸ்லிம்கள் நிம்மதியாக வாழமுடியாது. முஸ்லிம்களுக்கான தனியான முஸ்லிம் மாகாணத்தில்தான் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியும்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை யாருடைய கையிலும் ஒப்படைப்பதற்கு நாம் ஆயத்தமாக இல்லை. இதனை அரசாங்கமே உறுதிசெய்ய வேண்டும்.

- இப்படி அவர் குறிப்பிட்டார்.

# இலங்கை - இந்திய கப்பல் சேவை: தமிழக அரசு அனுமதிக்கவேண்டும்

## குமரி அனந்தன் வேண்டுகோள்

சென்னை,ஒக்.8

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தை தமிழக அரசு அனுமதிக்கவேண்டும் என குமரி அனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காந்தி பேரவைத் தலைவர் குமரி அனந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்திய வம்சாவளியினரும் தமிழர்களும் தூத்துக்குடிக்கு கப்பலில் வரத்துடித்துக் கொண்டிருக்கிறார்கள். கப்பலில் போக, வர ரூபா 3 ஆயிரத்து 500 கட்டணம். ஆனால, இப்போது விமானம் மூலம் போக, வர ரூபா 18 ஆயிரம் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கையிலிருந்து இந்தியா வரும் விமானம், சர்வதேச விமானம் என்ற வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இந்த விமானத்தில் இடம் பெற விரும்புவோர் 3 மணி நேரம் முன்னதாகவே விமான நிலையத்தில் சென்று பதிவுசெய்ய வேண்டும். கப்பலில் பயண நேரம் 6 மணி. விமானத்திற்காகச் செலவிடும் நேரத்தையும் கூடுதலான கட்டணத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் கப்பல் போக்குவரத்து உடனே தேவை என்பதை உணரலாம்.

தூத்துக்குடிக்கு வந்த மத்திய மந்திரி சத்ருகன் சின்கா, தமிழக அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாகக் கூறினார். எந்தவித பாதுகாப்பையும் கொடுக்க முன்வந்து, உடனே கப்பல் போக்குவரத்துக்கு தமிழக அரசு அனுமதி கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு குமரி அனந்தன் கூறியுள்ளார்.

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும். (ஐ)

# சமூகசேவை உதவிப் பணம் பெறுவோருக்கு தீபாவளித் தினத்தன்று புத்தாடைகள்

## இந்து கலாசார அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.8

குடாநாட்டில் அரசின் சமூக சேவை உதவிப் பணம் பெறுவோருக்கு தீபாவளித் தினத்தன்று புத்தாடை வழங்க இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகவலை யாழ். செயலகத்தைச் சேர்ந்த தலைமை அலுவலக உதவி அரச அதிபர் எஸ்.வேலும்மயிலும் தெரிவித்தார்.

அரசினால் வழங்கப்படும் சமூக சேவைப் பணம் பெறும் மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கே இந்து கலாசார அமைச்சு புத்தாடைகளை வழங்கவுள்ளது.

புத்தாடை வழங்குவதற்குத் தகுதியானவர்களை உடனடியாகத் தெரிவு செய்து தருமாறு யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் அமைச்சினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்படுபவர்களில் 55 விகிதத்தினர் பெண்களாகவும் 45 விகிதத்தினர் ஆண்களாகவும் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்த உதவிப் பணம் பெறுவோரில் புத்தாடை பெறத் தகுதியுடையோர் தெரிவுசெய்யப்பட்டதும் அவர்களின் தொகையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான புத்தாடைகளை வழங்கும் இடங்களைத் தீர்மானிக்குமாறு இந்து கலாசார அமைச்சு தனது சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளது. (ம-12)

## கருத்தரங்கு

போக்குவரத்து விதிகள் தொடர்பான கருத்தரங்கும் செயன்முறையும இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி பொலீஸாரால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்பாக நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கில் பொது மக்களைக் கலந்துகொள்ளுமாறு பொலீஸ் நிலைய குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக்றோகித தெரிவித்தார். (ம-117)

# கொழும்பில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது

## பொலீஸார் 24 மணிநேரமும் ரோந்து

கொழும்பு,ஒக்.8

கொழும்பு நகரில் பாதுகாப்பு நடைமுறைகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன. நகரத்தில் இடம்பெறும் குற்றங்களை கூடிய வரையில் தடுப்பது இதன் நோக்கமாகும்.

இதன் பிரகாரம் பொலீஸார், சைக்கிளகளில் குழுக்களாக 24 மணிநேரமும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

இவர்களுக்கு மிக நவீன தொலைத்தொடர்பு உபகரணங்களும் சிறிய ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை உட்பட மற்றும் ஆறு பொலீஸ் பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இந்த நடைமுறை அமுல்செய்யப்பட்டது. (ம-9)

# பத்திரிகையாளர் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.பிரதான வீதி கன்னியர் மடச்சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இராணுவ ட்ரக் - மோட்டார் சைக்கிள் விபத்துத் தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற சமயம் அங்கு இடம்பெற்ற கலவரத்தில் தமது சங்க உறுப்பினரான க.பிரசாந்தன் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக வட - இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் இனி மேலும் தொடராது இருக்க சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

# புதிய நியமனங்களை வழங்க தனக்கு அதிகாரம் இல்லை என்கிறார் ஆளுநர்

## அதனால்தான் மீள் நியமனம் வழங்கப்படுகிறதாம்

வடக்கு - கிழக்கில் புதிய நியமனங்களை வழங்கும் அதிகாரம் எனக்குத் தரப்படவில்லை. இதன் காரணமாகவே சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்குகின்றோம்.

இப்படிக் கூறினார் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா.

இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் விரக்தி நிலையில் இருக்கின்றபோது, வயது முதிர்ந்த, இளைப்பாறியவர்களுக்கு மீள் நியமனம் வழங்குவது நியாயமா என்று அரசாங்க உத்தியோகஸ்தர் சம்மேளனம் ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய சமயம் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற மாகாண பொது நிர்வாக அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்ட கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப்பதில் அளித்து ஆளுநர் தெரிவித்ததாவது:-

இன்றுள்ள நிலையில் எந்தவித புதிய நியமனம் வழங்குவதற்கும் எனக்கு அதிகாரம் இல்லை. தேவையான சந்தர்ப்பங்களில் மீள் நியமனம் வழங்கவும் அவசியமான பதில் நியமனங்களை வழங்கவும் மாத்திரமே அமைச்சரவையினால் எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதவி உயர்வு செய்யவும் அதிகாரம் வழங்கப்படவில்லை - என்றார் அவர். (ம-148)

# வல்லிபுர ஆழ்வார் ரதோற்சவம் இன்று

வடமராட்சி,ஒக்.8

பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் ரதோற்சவம் இன்று புதன்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இன்று ரதோற்சவம் நடைபெறுகின்றது.

காலை வசந்தமண்டப் பூசை இடம்பெற்று 9.15இற்கு பெருமாள் தேரில் ஆரோகணிப்பார்.

உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்கள் வசதிகருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

குடிதண்ணீர், சுகாதார வசதிகளும் விசேடமாக ஏற்பாடாகியுள்ளன.

ஆலய சூழலில் உள்ள ஆறு மடங்களில் அன்னதானம் வழங்கப்படவிருக்கின்றது. (ம-3)

# யுத்தத்தால் அழிந்து போயுள்ள பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது எமது கடமை

## புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

காரைதீவு,ஒக்.8

"கடந்த காலங்களில் நாம் அரசியல் பற்றியோ, அபிவிருத்தி பற்றியோ அக்கறை காட்டவில்லை. இன்று நிலைமை மாறியுள்ளது. கடந்த காலப் போரினால் அழிந்து போயுள்ள கிராமங்களை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கு உள்ளது."

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா, கல்முனை ஆதாரவைத்தியசாலையின் புதிய அவசர சிகிச்சைப் பிரிவுத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே. முருகானந்தம் தலைமையில் கடந்த வெள்ளியன்று மேற்படி திறப்பு விழா நடைபெற்றது.

அங்கு பேசிய பாவா மேலும் கூறுயதாவது:-

கடந்த காலங்களில் இப்பகுதி தமிழ்மக்கள் தாம் புறக்கணிக்கப்படுகின்றனர் - ஓரங்கட்டப்படுகின்றனர் - என்ற ஆதங்கம் இருந்தது. திட்டமிட்டு இந்த வைத்தியாலை புறக்கணிக்கப்பட்டதாகவும் மக்கள் கருதினர்.

ஆனால், இன்று இந்தப் பிரச்சினை ஓரளவு தீர்த்துவைக்கப்பட்டிருக்கிறது எனலாம். புதிய வைத்திய அத்தியட்சகர் சிறந்த நிர்வாகி அதனால் இவ்வைத்தியசாலை இன்று வீறுநடைபோட்டு முன்னேறி வருகிறது.

கிராமங்களில் அவ்வப்போது உருவாகும் புதிய புதிய நோய்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். துண்டுப்பிரசுரம், சுவரொட்டி மூலம் மக்களுக்கு அடிப்படை சுகாதார அறிவை உடனுக்குடன் ஏற்படுத்தவேண்டும்.

சுகாதாரம் சகல மக்களுக்கும் அவசியமான அடிப்படைத் தேவை. சுகாதார வசதி சகலருக்கும் விரிவுபடுத்தப்படவேண்டும். நோய்கள் இன, மதபேதம் பார்த்து வருவதில்லை. அதுபோல சுகாதார சேவைகளும், இன, மதபேதம் பார்க்காது சமமாக வழங்கப்படவேண்டும் - என்று அவர் கூறினார்.

விழாவில் மாவட்ட முன்னாள் வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். சசீந்திரன், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். மகேந்திரலிங்கம், குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ்.எஸ்.றயீஸ், அபிவிருத்திக் குழுத் தலைவர் பி. இராசநாயகம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# உன்னடியே சரண்புகுந்தோம்!

*வல்லிபுரந்தனில் வாழும் எங்கள் மாயக்கண்ணா - உந்தன்*
*வடிவழகைக் காண வந்தோம் எங்கள் மாயக்கண்ணா!*

*அலைகடலோரத்திலே அருங்காட்சி தருபவனே!*
*அற்புதமெல்லாம் நிகழ்த்தும் ஆனந்தப் பெருங்கடலோனே!*
*கனிவோடு எமைக்காக்கும் கண்ணன் நீயையா!*
*கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் நீயையா!*

(வல்லிபுரந்தனில் வாழும்)

*ஆசையினால் ஆடித்துன்பம் நாம் அடைந்தோம் கோடி*
*ஆணவத்தை அழித்தொழித்து அடைக்கலம் தாருமையா*
*சோதனைகள் போதுமையா எங்கள் மாயக்கண்ணா!*
*சோபனமாய் வாழவைப்பாய் எங்கள் மாயக்கண்ணா!*
*மனக்கவலை தீர்த்தருள்வாய் எங்கள் மாயக்கண்ணா!*
*மண்ணிலெம்மை நல்லவண்ணம் வாழவைப்பாய் எங்கள் மாயக்கண்ணா*
*உள்ளத்திலே உறுதியில்லை உதவிட வேறுயாருமில்லை*
*உன்னடியே சரண்புகுந்தோம் உவகையுடன் வரமருள்வாய்!*

ஆக்கம்: தென்புலோலியூர் சிவசுந்தரி.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று புதன் கிழமை காலை 8.30 மணிமுதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப்பிரிவு**

★ கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி.

**16 வயதுப்பிரிவு**

★ கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க. பாடசாலை.

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

★ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

இதேவேளை, 14 வயதுப்பிரிவு மற்றும் 16 வயதுப்பிரிவினர்களுக்கு இடையிலான கால் இறுதியாட்டங்களும் இன்று நடைபெறவுள்ளன.

(ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு, ஒக்.8

தீவக கல்வி வலயப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு**

★ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்.

★ வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் எதிர் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்.

★ வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

★ காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் எதிர் அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம்.

★ அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம் எதிர் புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

★ நெடுந்தீவு மகா வித்தியாலயம் எதிர் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

★ புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

★ அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம் எதிர் நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

(ம-86)


## விற்பனையாகிறது

- G.C.E. O/L English Language - 2003 December (6 model papers with Answers) BY: S. Theivathavabalan (Chundukkuli Ladies College) Price: 150/=
- Great Lifco Dictionery அச்சடிக்கப்பட்ட விலையின் 3 1/2 மடங்கிலும் -
- Mega Lifco Dictionery அச்சடிக்கப்பட்ட விலையின் 3 1/2 மடங்கிலும் -

★ மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

★ குறிப்பிட்ட அளவு பிரதிகளே உள்ளதால் ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 222 2573.

(சி-30591) (16-18-31)


## கண்ணீர் அஞ்சலி



எமது வடமாறில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. சி. சச்சிதானந்தசிவம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சி. இரத்தினம்

அவர்கள் 06.10.2003 மரணமான செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

வடமாறில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்.

(23427) (16-18-31)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
17
10
1922



உதிர்வு
07
10
1995

### அமரர் தம்பையா தாமோதரம்பிள்ளை

(இராசம்ஸ், தாமோதரம்பிள்ளை அன்சன்ஸ் ஸ்தா ...ர்)

திதி: 08.10.2003 சதுர்த்தசி

ஆண்டுகள் எட்டு சென்றாலும் எம்
ஆழ் துயரம் மாறவில்லை
கண்ணீர் பெருகுதையா - எம்
கவலைகள் வாட்டுதையா
அம்மாவும் நாங்களும் அழுது
புலம்புகின்றோம்
சும்மா இருமனமே என்று
சொன்னாலும் கேட்குதில்லை
பேரர் பேர்த்திகட்குப் பெரும்
துயரம் வாட்டுவதை
ஆருக்குச் சொல்லி அழுவோம்
இவ் வையகத்தில்
மருமக்கள் எல்லோரும்
மனமுடைந்து வாழ்கின்றார்
மீண்டு வந்து நீ பிறந்து
விடிவு எமக்கு தந்திடுவாய்.

டச் வீதி, சாவகச்சேரி.
தற்காலிக முகவரி:-
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(23438) (16-18-31)

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஆறாம் ஆண்டின் நினைவலைகள்

மண்ணில்
23
03
1923



விண்ணில்
14
10
1997

### திருமதி நாகலிங்கம் கண்மணி

கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்த்தீர்!
கல்வியால் பண்பால் காசினியில் உயர வைத்தீர்!
கஷ்டங்கள் வந்தபோதும் கலங்காது வளர்த்தீர்!
காலத்தால் அழியாத காவியம் படைத்தீர்களம்மா!
காலம் உள்ளளவும் மனதை விட்டு உம் நினைவு நீங்காது
கண்ணீர் மலர்களை உங்கள் காலடியில் சொரிகிறோமம்மா!

தகவல்:-
நா.தெட்சணாமூர்த்தி,
145/2, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(23402)(12-16-31)

## 6 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அமரர் க.குலசேகரம்பிள்ளை (ஜே.பி.)

கற்பனையிலும் காணமுடியாத
அற்புதமே! எங்கள் ஐயாவே!
ஆண்டுகள் மாறலாம் அன்பு மாறுமா?

மனைவி மக்கள் பேரர் பூட்டர் என
மலையாகக் கூட்டமுண்டே உங்களுக்கு

அன்புச் சிரிப் பொலிக்கு அழுகின்றோம்
ஆசை முகம் காண துடிக்கின்றோம்

போற்றுகிறோம் உம் பொன்னடிகள்
வாழ்... ...ம் வள்ளல் இறையடி சேர்ந்திடவே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
விழுப்பளை அம்பாள் துணை

எழுதுமட்டுவாள்.

(23428)(12-16-31)

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேசு இரத்தினபூபதி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதியில் (யாழ்ப்பாணம்) வசித்து வந்தவரும் தற்போது எப்பாறோவில் வசித்து வந்தவருமாகிய திருமதி நாகேசு இரத்தினபூபதி அவர்கள் 05.10.2003 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா நாகேசு (பிரபல வர்த்தகர், பொரளை) அவர்களின் பாசமிகு மனைவியும் கலாதேவி, கலாநாதன், கலாதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருபானந்தன் (பிரபல வர்த்தகர், பொரளை), குமரேஸ்வரி, சசிகரா ஆகியோரின் அன்பு மாமியாரும் பரராஜசிங்கம் (Jaffna Traders), இராசையா, சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் ஐயாத்துரை, செல்லம்மா, நல்லையா, ஞானம்மா ஆகியோரின் மைத்துனியும் பிரதீபன் - சுபா, நிஷாந்தினி - லோகராஜா, தர்ஷினி - அருள்நேசன், ஹேமமாலினி, சுபாங்கி, சுஜீவன், வினுஷா, வேணுஷா, அபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹரிசன், நிவேதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.10.2003) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிமுதல் 9.00 மணிவரை 3280, Sheppard Ave - East (Warden - Sheppard)இல் அமைந்துள்ள Higland Funeral Homeஇல் பார்வைக்கு வைக்கப்பட்டு, இன்று (08.10.2003) புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை அதே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் (DON MILLS & STEEL) 33, MEMORY GARDENS LANEஇல் அமைந்துள்ள HIGHLAND MEMORIAL GARDEN CEMETERYஇல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கலாநாதன் - (416) 269 - 7895
கிருபானந்தன் - கலாதேவி - (416) 289 3602
கலாதரன் - (905) 475 - 4122.

(23430) (12-16-31)

கோப்பாய் தெற்கு - பழைய வீதி - ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயில்
(நாச்சிமார் கோயில்)

**பூரணைதின விழா**

அம்பிகை அடியார்களே!

09.10.2003 வியாழக்கிழமை பகல் விசேட பூஜையைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறும்.

மாலை 6.30 மணிமுதல் அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து ஸ்ரீ சக்கர யந்திரப் பூஜை நடைபெறும்.

விசேட நிகழ்வு:

இரவு 8.00 மணிமுதல் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சைவப்புலவர் சிவநெறிக் கலாநிதி கவிமணி இராசையா ஸ்ரீதரன் குழுவினர் வழங்கும்
வில்லுப்பாட்டு: "திருமுறைதந்த பெருமகனார்"
அடியார்கள் வருக! அம்பிகை அருள் பெறுக!!

*கோப்பாய்.* (23433)(16-18-31) -பிரதம குருக்கள்.



**வேலையற்ற பட்டதாரிகள் சங்க பொதுக் கூட்டம்**

காலம் :-நாளை (09.10.2003) வியாழக்கிழமை
நேரம் :- காலை 10.30 மணிக்கு
இடம் :- புதிய உயர் கல்லூரி (ஆரியகுளம் சந்தி)
விடயம் :- வேலைவாய்ப்பு தொடர்பான அவசர கலந்துரையாடல்.

இன்றுடன் மீள் பதிவுகள் யாவும் நிறைவுசெய்யப்படும்.

-செயலாளர்,
வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.

(23391) (16-18-31)


## அமரர் பொன்னுத்துரை ஞானேஸ்வரி அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 01 - 1933



மறைவு 28 - 08 - 1993

எங்கள் அன்புத் தாயார் நந்தாவில் மனோன்மணி ஆலய முன் மண்டபத்தில் கொடிய விமானத் தாக்குதலுக்கு அஞ்சி அபயமடைந்தவேளை அகால மரணமானதில் இவ்வேதனை தரும் இழப்பினால் தவிக்கும் எங்களை மனோன்மணி அம்மனின் பாதஞ் சேர்ந்தார் என்ற நினைவு ஆறுதல் அளிக்கின்றது.

10ஆண்டுகள் ஆனாலும் பசுமையான உங்கள் நினைவு எம் நெஞ்சில் நீங்காது நிலைத்திருக்கும்.

*தகவல்:- ராஜ் (மகன்)*
*நந்தாவில் அம்மன் கோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கோண்டாவில். T.P.: 0777 - 060155.*

உங்கள் நினைவோடு:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(23278)(16-18-31)

## ஆண்டுகள் எட்டும் ஆயிற்றோ

மலர்வு 05 - 05 - 1925



உதிர்வு 07 - 10 - 1995

### திருமதி இராசம்மா இராசையா

**திதி: சதுர்த்தசி 08.10.2003**

அம்மா! அம்மா!! என்றழைத்தால் ஓடிவந்தெம்மை அணைப்பாய்
சிந்தை குளிர வைத்து நித்தம் துயர்துடைப்பாய்
பித்தம் எமக்கேற பிரிந்து சென்றதேனம்மா?
எம்மைத் துயருள் ஆழ்த்திவிட்டுப் பிரிந்து சென்றதேனம்மா?
கண்ணே மணியே கற்கண்டே என் கனியமுதே என்று பாடியே
தாலாட்டிடும் அம்மா எங்கே?
தங்கள் ஆத்மசாந்திக்காய் எல்லாம் வல்ல இணுவில்
ஸ்ரீ பரராஜசேகரனை இறைஞ்சுகின்றோம்.

*கே.கே.எஸ்.வீதி,*
*கோண்டாவில் மேற்கு,* (C/30592) (29-16-8-31)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### யோகேஸ்வரன் அஜந்தீப்

**(அஜந்தன் - நாரந்தனை)**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் அஜந்தீப் அவர்கள் 06.10.2003 திங்களன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் நாரந்தனையைச் சேர்ந்த யோகேஸ்வரன் - ஜான்சிராணி தம்பதிகளின் அருமை மகனும் பிரதீப், ஷேமா, தசிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2003) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*6/7, ஐயனார் கோவில்வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (23441) (29-12-16-31)

தகவல்:
செ.யோகேஸ்வரன் (யோகர்).

## தேர்தல் சட்டம் ஒன்றே போதும்: ஆணையாளர் கருத்து

கொழும்பு,ஒக்.8

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள ஐந்து தேர்தல் சட்டங்களையும் ஒன்றிணைத்து ஒரே சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக கருத்துத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல், மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு ஆகியவற்றுக்குத் தனித்தனியாக ஐந்து தேர்தல் சட்டங்கள் தற்போது நடைமுறையிலுள்ளன.

ஆனால், தேர்தல் வாக்களிப்பு நடைமுறைகள் அனைத்துக்கும் ஒரே விதத்தில் அமைந்துள்ளதால் வாக்களிப்பு விசாரணைச் சட்ட மூலம் என ஒரேயொரு சட்டமாக ஆக்கமுடியுமெனத் தேர்தல் ஆணையாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சுமங்கலி பூசை நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.8

ஸ்ரீலஸ்ரீ கடவுள் சுவாமிகளின் 23 ஆவது குருபூசைத் தினம் நாளை வியாழக்கிழமை உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.8

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று நடத்தி வருகின்ற அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வண்ணை மேற்கு மதவடி ஒழுங்கை வாலையம்மன் ஆலயத்தில் இடம்பெறும். (ஒ-10)

## கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் திருத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

கடந்த 3அம் திகதி உதயனில் வெளியான சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பணிமனையின் 'அரசாங்க கேள்வி அறிவித்தல்' விளம்பரத்தில் -

சலவைச் சேவை-2003 என்பது சலவைச்சேவை 2004 என்று இருக்க வேண்டும் என சுகாதார சேவைகள் பணிமனை கணக்காளர் அறிவித்துள்ளார். (ஐ)


**வெளிநாட்டு வேலை வாய்ப்பு**
(பயணம் 10 நாள்களில்)

டோஹா கட்டாரில்
★ டீசல் பெற்றோல் மெக்கானிக் -02
★ ஓட்டோ வயரிங் -01
வெற்றிடம் உண்டு

விரும்புபவர்கள்:
*344, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
இந்து (கோயில் வீதிச் சந்திக்கருகில்)
09.10.2003 வியாழன்
12.00-6.00p.m. நேரில் வருக.

(23429) (29-16-18-31)



**ராஜா** யாழ்ப்பாணம்

பிரசாந்த்.
கிரண்.
வடிவேல்.
நம்பியார்
நடிப்பில்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)



**நாகம்ஸ்** சுன்னாகம்



விக்ரம், திரிஷா, விவேக் நடித்த
(ரீல்ஸ்)
காட்சிகள் :
11.00, 3.00 (பி.நே.)
அடுத்த வெளியீடு : ராமச்சந்திரா
(C/29908) (12-17-31)



**நிறைஞ்சனாஸ்**

இன்று முதல்
பாலா, திபு, வடிவேல் நடித்த
**அன்பு** (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 க்கு
ஜக்கிஜான் நடித்த கராட்டிப்படம்
**TUXEDO**
(13-16-31)(C/30537)


## வல்லிபுராழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவ பண்ணிசைப் போட்டி முடிவுகள்

*மேற்பிரிவு*

| பெயர் | இடம் | பாடசாலை |
|---|---|---|
| பு.சுகன்யா | 1ஆம் இடம் | ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர். |
| ந.ரஞ்சித்பாலன் | 2ஆம் இடம் | யா/ஹாட்லிக் கல்லூரி |
| கோ.சுகந்தினி | 3ஆம் இடம் | யாழ்ரன் கல்லூரி, காரைநகர். |
| வ.மஞ்சுளா | 4ஆம் இடம் | யாழ்ரன் கல்லூரி, காரைநகர். |
| சு.சசிகுமார் | 5ஆம் இடம் | யா/ஹாட்லிக் கல்லூரி. |

*மத்திய பிரிவு*

| பெயர் | இடம் | பாடசாலை |
|---|---|---|
| கு.சொரூபிகா | 1ஆம் இடம் | யா/விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம். |
| சி.நதியா | 2ஆம் இடம் | ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர். |
| சு.துஷ்யந்தினி | 3ஆம் இடம் | யா/விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம். |
| த.இந்திகா | 4ஆம் இடம் | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். |
| த.திருவாழ்மார்பன் | 5ஆம் இடம் | யா/புற்றளை மகா வித்தியாலயம். |

*கீழ்ப்பிரிவு*

| பெயர் | இடம் | பாடசாலை |
|---|---|---|
| ந.கோகிலவாணி | 1ஆம் இடம் | யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. |
| ம.கிருஸ்ணி | 2ஆம் இடம் | ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், சுழிபுரம். |
| ப.சிவப்பிரியா | 3ஆம் இடம் | ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், சுழிபுரம். |
| ச.ஷண்மதுரன் | 4ஆம் இடம் | ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், சுழிபுரம். |
| சு.விசாகன் | 5ஆம் இடம் | யா/ஹாட்லிக்கல்லூரி. |
| சு.அரவிந் | 6ஆம் இடம் | யா/நெல்லியடி ம.ம.வி. |
| யோ.அஞ்சலா | 7ஆம் இடம் | தேவரையாளி இந்துக் கல்லூரி. |

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான ஆலய பரிபாலன சபையினர்.

(சி-30595) (31-16-18)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா சிவசுப்பிரமணியம் (மணியம்)

துர்க்காபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (07.10.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - வியாளம்மா தம்பதிகளின் அருமை மகனும் யோகநாயகியின் அன்புக் கணவரும் சந்திரகுமார், ஆனந்தகுமார், காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராஜியின் அன்பு மாமனாரும் சியாமளா, பிரதீபன், சுதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2003) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீநாகபூஷணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (23439) (29-12-16-31)

தகவல்:
சந்திரகுமார் (குமார்),
ஆனந்தகுமார் (லக்கி)
(பிள்ளைகள்).

### திருமதி செல்லம்மா பாலசுந்தரம்

**(சோழங்கன், கரணவாய் தெற்கு)**

திருமதி செல்லம்மா பாலசுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் தா.பாலசுந்தரம் (STERLING PRODUCTS LTD-இளைப்பாறியவர்) அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீபவனானந்தன் (பொறியியலாளர், லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும் கனகாம்பிகையின் மாமியும் தனஞ்சயனின் பேர்த்தியும் காலஞ்சென்ற ஆ.வ.கந்தையா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் (உருட்டாலை) தம்பதியினரின் மருமகளும் குலசேகரம், வல்லிபுரநாதன், நீலகண்டன், திருமதி கமலாம்பிகை இராமச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பம்பலப்பிட்டி யோசப் ஒழுங்கை (டுப்ளிகேசன் றோட்டிலிருந்து, இல.34 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (09.10.2003) வியாழக்கிழமை காலை 9.45 மணிக்கு கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு காலை 10 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி இல:*
*2580807, 2585615.* (C/30597) (29-12-16-31)

தகவல்:
கந்தையா நீலகண்டன்
(சட்டத்தரணி).

### திருமதி குழந்தைவேல் அன்னம்மா

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குழந்தைவேல் அன்னம்மா அவர்கள் நேற்று (07.10.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் குழந்தைவேல் (உரிமையாளர், சக்திவேல் ஸ்ரோர்ஸ், முரசுமோட்டை) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி விக்கினேஸ்வரி சிவசுப்பிரமணியம் (ஆசிரியை, யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்) அவர்களின் வளர்ப்புத் தாயாரும் (அத்தை), சிவலிங்கநாதன் (லண்டன்), வடிவேற்கரசன், ஞானவேற்கரசன் (C.T.B.), வடிவேற்கரசி ஆகியோரின் அத்தையும் காலஞ்சென்ற சிதம்பரநாதர் சிவசுப்பிரமணியம், சிதம்பரநாதர் சிவசண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செந்தூர்க்குமரன், திருக்குமரன், இளங்குமரன், கஜானன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி ஊளியான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*அன்னவாசா,*
*கைதடி மேற்கு, கைதடி.*

தகவல்:
செல்லையா சிவசுப்பிரமணியம்
(கிராம உத்தியோகத்தர், கைதடி கிழக்கு J/289) (பெறாமகன்).

(23440) (29-12-16-31)

# இடைக்கால நிர்வாக உரிமைகள் நிமிர்வாகவே அமையவேண்டும்

## முல்லை மாவட்ட ஆசிரியர் சங்கம் பிரபாவுக்கு கடிதம்

கிளிநொச்சி,ஒக்.8

இடைக்கால நிர்வாக உரிமைகள் நிமிர்வாகவே அமையட்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் முல்லைத் தீவு மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த வேண்டுகோளைக் குறிப்பிட்டு தலைவர் பிரபாகரனுக்கு அச்சங்கம் கடிதம் ஒன்றினையும் அனுப்பியுள்ளது. அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எங்கள் தேசம் இரத்தக் கறை படிந்த தேசம். 17 ஆயிரம் மாவீரர்களதும், 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்களதும் குருதி உறைந்த வீரம் விளைந்தது இந்தப் பூமி.

போர் பல கண்டு, போர் சாணக்கியம் கண்ட பல நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்து அதன் சுமைகளை பல்லாண்டுகள் சுமந்தவர்கள் எங்கள் மக்கள்.

வீரத்திலகமிட்டு போருக்குத் தனது பிள்ளையை அனுப்பிய வீரத்தாய் எமது மண்ணில் வாழ்கின்றாள். உச்சி மீது வான் இடிந்து வீழ்ந்தாலும் அச்சமில்லை என்று உறுதிகொண்ட மக்களே இந்த மண்ணில் வாழ்கின்றனர்.

இவ்வளவு இதயங்களில் வடியும் உதிரங்கள் வெளிப்பாடாக, நடுநாயகமாக உலகத் தமிழினத்தில் தலைவனாக வாளேந்தி தமிழர்களிற்கு வாழ்வு தர அல்லும் பகலும் விளித்திருக்கும் தாங்கள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்பதனால் எம்மின உரிமைகள், உணர்வுகளை, எம்தேச இறைமையைச் சிறிதும் தவறவிடாது பெறுவீர்கள் என்பதை பூரணமாக நம்புகின்றோம்.

அதனையே எமது ஆசிரிய சங்கமும் வேண்டுகின்றது. எம்மினத்திற்கு பிச்சை மட்டுமல்ல எச்சிலும் தர விரும்பாதவர்கள் பெரும்பான்மை இனம் என்பதை காலம் காலமாகக் கண்டோம்.

வாழ வழியின்றி கருத்துக் கூறியவர்களின் கரங்கள் வெட்டப்பட்டதை நாம் அறிவோம் உண்ண வழியின்றி பிச்சை கேட்டவர்களின் கரங்கள் துண்டாடப் பட்டதனையும் நாம் மறவோம்.

கல்விகற்க விரும்பி பாடசாலையில் இருக்கும் போது பாடசாலையோடு குண்டு போட்டு அழித்ததனை நாம் அறிவோம். ஈனர்களின் இத்தகைய செயற்பாடுகளால் தமிழ் இதயங்களில் எழுந்த தீச்சுவாலையை தாங்க முடியாததாலேயே இன்று அரசு தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசுகின்றது.

அந்த உரிமை சீரழிந்து அழுது வாழும் தேசத்திற்கு நிறைவான தீனை (உணவை) கொடுக்கவேண்டும். உறவுகளையும், சொத்துக்களையும், சுகங்களையும் பிரிந்த எம் பரம்பரையின் உள்ளங்களுக்கு பூரண ஆதரவை வழங்கவேண்டும். அப்படியானால் மேற்குலக நாடுகளில் இடைக்கால அரசிற்கு கொடுப்பது போல் பாதுகாப்பு நிதி மற்றும் நீதித்துறை, சட்டம் என்பனவும் - காணி, கல்வி போன்ற துறைகளில் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் வழங்கப்பட வேண்டும்.

செய் அல்லது செத்துமடி என்ற முடிவிற்கு வந்த எமது இனத்திற்கு பெய்யும்மழை செழிப்பாக பெய்ய வேண்டும். பொய்த்துப் பெய்தால் அது பூகம்பமாகவும் மாற நேரிடும்.

தென்னிலங்கையில் வாழும் ஜே.வி.பி. அல்லது சிஹல உறுமய கட்சிகளை ஆதரிப்பவர் போன்றவர்கள் அல்ல நாங்கள் தலைமை தலையசைத்தால் கல்லறையை அணைப்பதற்கும் நாம் தயங்கமாட்டோம்.

நீதி, நேர்மையான தங்களின் பாதையைச் செப்பனிட்டவர்களும் செப்பனிடப்போகிறவர்களும் நாங்கள். தமிழர்களுக்கு எந்த உரிமையையும் கொடுக்கவேண்டாம் என அந்தக் கட்சிகள் தடுத்தால் ஊனமுற்ற உரிமைகள் அடக்கிய இடைக்கால அரசை ஏற்கவேண்டாம் எனக் குரல் கொடுக்க எமக்கு உரிமையுண்டு.

அதனை மிச்சமின்றி ஏற்கும் இதயம் தங்களிடம் உண்டு என்பதனை நாம் நன்கறிவோம். அதனால், எமக்கு தேச இறைமையைப் பாதுகாக்க பாதுகாப்புச் சட்டம், நீதி என்பவையாவும் எமது கைகளில் இருக்கவேண்டும். எங்கள் மண்ணில் இடம்பெறும் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், நமது வளங்களின் உச்சப்பயன்பாட்டை பெறவும், காணி உரிமை, நிதிப்பரிபாலனம் எங்களிடம் இருக்கவேண்டும்.

எமது பாடசாலைகளில் சுதந்திரமாக கல்விகற்கவும், அதற்கு வசதியாக பௌதிக வளங்கள், ஆளணிகள் தேடவும் கல்வித்துறையும் எமது பரிபாலனத்தின் கீழ் இருக்கவேண்டும். இதுவே எமது சங்கத்தின் வேண்டுகோளாகும்.

இந்த அம்சங்கள் நழுவிய குறைவான நிர்வாகம் எமது தேசத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாது. எம்மின உரத்தின் தரத்தை உணர்ந்த உத்தமர் நீங்கள் சோரம் போகாது எம்பாரத்தை என்றும் மதிப்பீர்கள் என நம்புகின்றோம்.

என்று அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஒ-5)

## மாணவரைப் பலவந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மட்டக்களப்பு தேனகம் விருந்தினர்விடுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச மற்றும் அரசசார்பற்ற ஊடகங்கள் சில உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வருவது தொடர்பாக நாம் மனம் வருந்துகின்றோம்.

நாம் எந்தவொரு மாணவரையோ அல்லது சிறுவரையோ பலவந்தமாக எமது இயக்கத்தில் இணைப்பது கிடையாது. அவர்களே பல்வேறுபட்ட பிரசசினைகள் காரணமாக எம்முடன் இணைகின்றனர்.

பொய்யான செய்திகளையும், வதந்திகளையும் பரப்புவதில் சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளின் செயற்பாடுகள் மேலோங்கியுள்ளன. அவர்களின் திட்டமிட்ட சதி நடவடிக்கை தான் எமது இயக்கத்தில் சிறுவர்கள் பலவந்தமாக இணைக்கப் படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு. இதனை நாம் முற்றாக மறுக்கின்றோம் என்று கிரிஷன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் அண்மையில் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட 11 பாடசாலை மாணவர்களும் தாம் சுயவிருப்பின் பேரிலேயே விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்துள்ளதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-5)

## புனர்வாழ்வுக்கழக வீட்டுத்திட்டம்

கிளிநொச்சி,ஒக்.8

திருகோணமலை திரியாய்க் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் அப்பகுதியில் மீளக்குடியமரவுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் புதிய வீடுகளை அமைக்கும் வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகிறது.

இதன் ஒருபகுதியாகத் திரியாய் கட்டுக்குளம் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 10 வீடுகள் எதிர்வரும் 12ஆம் திகதி பயனாளிகளிடம் ஒப்படைக்கப் படவுள்ளன.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட குச்சவெளிப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் அமைக்கப்பட்ட பிரதேச அலுவலகத் திறப்பு விழாவும் இடம் பெறவுள்ளது. (ஒ-5)

# சிறுவர்களைப் புலிகள் சேர்ப்பது குறித்து ஆராய்வு

## ஐ.நா.அமைப்பு நடவடிக்கையாம்

கொழும்பு,ஒக்.8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதாகக் கூறப்படுவது பற்றி ஐ.நா.சர்வதேச சிறுவர் கல்வி நிலையம் ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறு அந்த நிலையத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ரெக்ஸ் ஸின்பான் தெரிவித்தார். இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதனை விட ஒரு சிறுவனாகிலும் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவது சிறுவர்களின் உரிமைகளை மீறும் செயல் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. சிறுவர்களை விடுதலைப் புலிகள் தம்முடன் சேர்த்துக் கொள்வார்களேயானால், போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு விடுதலைப் புலிகள் அளித்து வரும் பங்களிப்பையும் அர்ப்பணிப்புத் தன்மையையும் அது பாதிக்கும்.

கிளிநொச்சியில் நடந்த வெள்ளிக்கிழமை இடைத்தங்கல் முகாமைத் திறந்து வைத்தபோது சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருமாறு புலிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள சகல மாவட்டங்களிலும் சிறுவர்கள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ந்தும் கிடைத்து வருகின்றன. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு-கிழக்கு செலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 லட்சம் ரூபாவாகவும், மீண்டுவரும் செலவினம் 121 கோடியே 55 லட்சம் ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

திறைசேரியின் இப்பணிப்புரையை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா மாகாண சபையின் சகல திணைக்களத் தலைவர்களுக்கும், செயலாளர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார். பிரதம செயலாளரின் கடிதம் கடந்த 29ஆம் திகதி அனுப்பப்பட்டிருக்கிறது.

திறைசேரியின் பணிப்புரையை அடுத்து புதிய அறிக்கைகளை அனுப்ப செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும் கோரப்பட்டிருக்கின்றனர். அந்த அறிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் 13ஆம் திகதி முதல 15ஆம் திகதி வரை திணைக்களத் தலைவர்கள் மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடைபெறுமெனவும் நிதி வெட்டு குறித்து ஆராயப்பட்டு செலவின மதிப்பீட்டின் இறுதி வடிவம் தயாரிக்கப்படும் எனவும் பிரதம செயலாளர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபையின் செலவின மதிப்பீடைக் குறைக்கும்படி நிதி ஆணைக்குழு திறைசேரிக்கு சிபாரிசு செய்திருக்கிறது. (ஒ-148)

## வெட்டுக்காய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை கைது செய்தனர்.

இந்நிலையில், நேற்றுப்பகல் இளைஞனின் மரணவிசாரணையை யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மேற்கொண்டார். சடலம் மீட்கப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட மேலதிக நீதிவான் யாழ். ஆஸ்பத்திரிக்கும் சென்று விசாரணை செய்தார்.

இறந்த யோ.அஜந்தீப்பின் பெற்றோர், சடலத்தை மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற ஓட்டோசாரதி, அவரது சகோதரன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் தினத்தில் அஜந்தீப் தனது 21 ஆவது பிறந்த நாளைக்கொண்டாடியதாகவும் -

பின்னர் அவரது நண்பர் ஒருவருடன் வெளியே புறப்பட்டுச் சென்றதாகவும் - விசாரணையின் போது நீதிவானின் கவனத்துக்குக்கொண்டுவரப் பட்டது.

இதனையடுத்து குறிப்பிட்ட நண்பரை இன்றைய விசாரணைக்கு அழைத்துவரும்படி இறந்தவரின் உறவினரை நீதிவான் பணித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தகவல் அறிந்ததும் சடலம் மீட்கப்பட்ட நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் யாழ். - நல்லூர் கோட்ட பணிமனையினர் விரைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளே இருவர் சரணடையவும், ஒருவர் கைதாகவும் வழிசெய்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-3-8-9-ரி)

## நாவாந்துறைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லவிடாது தடுத்தனர்.

இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றநிலை உருவானது இதற்கிடையில், விபத்துக் குறித்த பூர்வாங்க விசாரணை நடவடிக்கைகளை பொலீஸார் மேற்கொண்டனர். அதனையடுத்து கடற்படையினரின் ட்ரக் அங்கிருந்து அகற்றப்பட்டது. பின்னரே நிலைமை வழமைக்குத்திரும்பியது.

## பொலீஸ்மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர். விசாரணைகளின் முடிவின் பின்பே எதையும் கூற முடியும்.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு செய்திகளைத் திரித்து எழுத முற்படுவது அநாகரிகமான செயல்.

- இப்படி அவர் கூறினார்.

பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா அங்கு தெரிவித்ததாவது:-

பொலீஸ் சேவையில் 36 வருடங்களைப் பூர்த்திசெய்துள்ள நான், பொலீஸ் திணைக்களத்தின் வளர்ச்சிக்காகவே இதுவரை செயற்பட்டு வந்திருக்கிறேன். என்மீது, விரல் நீட்டி குறை சொல்லும் நிலையில் நான் எந்தப் பிழையும் செய்யவில்லை! எனது சேவை பற்றி பொலீஸ் திணைக்களத்துக்கு நன்றாகவே தெரியும்.

எனக்குத் தனிப்பட்ட ரீதியாக எத்தனையோ வைபவங்களுக்கு அழைப்பிதழ்கள் வருகின்றன. அவைகளை ஏற்றுச் செல்லும்போது அவரின் பின்னணியைப் பற்றி விசாரணை செய்ய முடியாது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

*(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)*

தீபாவளி வாழ்த்து மடல்கள்
வெளிவந்து விற்பனையாகின்றன
அதிநவீன கட்டிங் காட்டுகள், பலவிதமான டிசைன்களிலான வண்ணப் படங்களுடன் முன்னணி சினிமா நடிகர்கள், சுவாமிப் படங்கள், பூக்காட்டுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
மக்மிலன் புத்தகசாலை, இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (29-18-12)
சிறிகாந்தா புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-30589)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
பிரகாஷ்ராஜின் நாம் (பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல் யாழ்ப்பாணம்.
(23297)(12)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
பிரகாஷ்ராஜ் நடித்த நாம்
விஷ்ணு வீடியோ K.K.S.வீதி, கோண்டாவில்.
(C-30596)(12)

புதிய VCD வெளியீடு
பிரகாஷ்ராஜ் நடித்த நாம்
பிளாஷ் சீடி ஹவுஸ்
இல. 640, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரார் உதயலகர் அருகாக)
T.P.- 0777 - 162349
(23435)(12)

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது, றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம் – 021 2223891, 021 2226297, 071 2348888
கொழும்பு – 074 512666, 360290/1
E-mail:jaffna@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமானசேவை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.